# பாலர் கல்வி

(தென் இந்திய ஆசிரியர் சங்கத்தின் மாதாந்தரத் தமிழ் பத்திரிகை)

520, ஹைரோட், திருவல்லிக்கேணி, மெட்ராஸ்

4555
4-54

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
10 NOV 1954
MADRAS

—: o :—

"முயற்சி திருவினை யாக்கும்"

தொகுதி 19 | ஜய ஹூ புரட்டாசி மீ
1954 செப்டெம்பர் | பகுதி 6

## பொருளடக்கம்

CONNEMARA PUBLIC LIBRARY
18 JAN 1956
MADRAS

| | | பக்கம் |
|---|---|---|
| 1. | கையெழுத்துப் பயிற்சி<br>V. நடராஜன் ... | 75 |
| 2. | கணக்கு: கற்பித்தல்<br>T. S. ராஜகோபாலன், B.A., L.T. ... | 82 |
| 3. | 24-வது தென்னிந்தியக் கல்வி வாரம் ... | 86 |
| 4. | செய்தித் திரட்டு ... | 91 |

---

MEMBERS OF THE JOURNAL COMMITTEE

Sri S. NATARAJAN
„ R. KRISHNAMURTHY
„ K. KURUVILA JACOB
„ T. P. SRINIVASAVARADAN
„ V. NATARAJAN
„ V. ARUNAJATAI
„ L. MARIAPRAGASAM
Sri S. MARIA JOSEPH
„ J. VAIDYANATHAN
„ G. SRINIVASACHARI
„ C. RANGANATHA AIYENGAR, *Secretary*
„ V. B. MURTHI, *Asst. Secretary.*

உள் நாடு: வருஷ சந்தா ரூ. 2—0—0 தனிப் பிரதி ரூ. 0—4—0

# சந்தாதார்களுக்கு அறிக்கை

1954 செப்டம்பர் மாதத்துடன் முடிவடையும் சந்தா நம்பர்கள்

வட ஆற்காடு—NA. 71, 72.
தென் ஆற்காடு—SA. 57, 66.
செங்கற்பட்டு—Ch. 5.
சித்தூர்—Ct. 4-A., 6.
கோயம்புத்தூர்—Co. 18, 22.
மதுரை—Md. 36.
சேலம்—S. 2, 10, 11, 32
தஞ்சாவூர்—Tan. 63
திருநெல்வேலி—Tin. 10, 39, 48, 65.
திருச்சிராப்பள்ளி—Tri. 7, 8.
திருவாங்கூர்—Tra. 1.

குறிப்பு:—ஷை சந்தாதார்களும் சந்தா பாக்கியுள்ள மற்ற சந்தாதார்களும் தங்கள் சந்தா தொகையை செப்டம்பர் மாத முடிவிற்குள் கட்டிவிடும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அடுத்த இதழை வி. பி. யில் அனுப்ப நேரிடுமாகையால் சந்தாவை முன்கூட்டியே செலுத்திவிடும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். தற்சமயம் சந்தா அனுப்ப அசௌகரியமுள்ளவர்கள் செலுத்தக்கூடிய தவணையை முன்பாகவே தெரிவிக்கலாம்.

—பத்திராதிபர்

# தென் இந்திய ஆசிரியர் சங்கம்

## 1954 செப்டம்பர் மாதத்திய நாட்குறிப்புக்கள்

---

12-9-54 : சர்க்கார் காரியாலய கல்வி இலாகா காரியதரிசிக்கு ஒரு டெபுடேஷனுக்கு பேட்டி அளிக்கும்படி கேட்டு லெட்டர் எழுதப்பட்டது.

13-9-54 : திருச்சி கில்டு மகாநாட்டுத் தீர்மானங்கள் சர்க்காருக்கு அனுப்பப் பட்டன.

15-9-54 : சர்க்காருக்கு அனுப்பவேண்டிய யாதாஸ்து தயாரிக்க ஒரு பிரதிநிதிகள் மீட்டிங்.

20-9-54 : பாலர் கல்வி—ஜூலை-ஆகஸ்டு 1954—பிரசுரம்.

30-9-54 : உப சம்பளம் பற்றிய யாதாஸ்து சர்க்காருக்கு அனுப்பப்பட்டது.

# பாலர் கல்வி

தொகுதி 19 | ஜய ஸ்ரீ புரட்டாசி மீ 1954 செப்டெம்பர் | பகுதி 6


## கையெழுத்துப் பயிற்சி

V. நடராஜன்

மொழிப் பயிற்சியில் பேசுவது, வாசிப்பது, எழுதுவது என்பதே இயல்பாக அமைந்த நிலைகள். கணிசமான பேச்சுத் திறமை ஏற்பட்ட பிறகு சொற்களையும் வாக்கியங்களையும் படிக்க பாலர்கள் ஆசைப்படுகிறார்கள். பிறகு எழுதும் ஆசை ஏற்படும். இவ்விதம் படிப்படியாகப் பயிற்சி இருக்கவேண்டும் எனினும் ஒன்றை முடித்த பிறகுதான் அடுத்த படிக்குச் செல்லவேண்டும் என்ற நியதி இல்லை. பேச்சுப் பயிற்சி முதல் வகுப்பில் முடிந்து விடாது. உயர்தர வகுப்புக்களில் கூட நடைபெறும். வாசிப்புப் பயிற்சியும் அப்படியே. ஆகவே எழுதும் பயிற்சியை உடனடியாக முதல் மாதத்திலேயே தொடங்கவேண்டும். பேச்சு, படிப்பு, எழுத்து மூன்றும் தொடர்ந்தேத்தியாகவே நடைபெறும்.

பழையமுறைப் பள்ளிகளில் எழுதும் பயிற்சிதான் முதல் வேலை. அதுவே முக்கிய வேலை. எழுத்துக்களை எல்லாம் வரிசைக் கிரமமாகக் கற்பித்து எழுதும்போதே கூச்சல் போட்டு உச்சரித்துக் கொண்டு எழுதுவது வழக்கம். பிறகுதான் இரண்டெழுத்துச் சொற்கள், மூன்றெழுத்துச் சொற்கள் எனப் படிக்க வேண்டும். திண்ணைப் பள்ளி முறை இதுவேயாகும். பாலர்களுக்கு இவ்விதம் நெடுநேரம் எழுதுவது மிகவும் அலுப்பாகிவிடும். ஆரம்பத்திலேயே இவ்வித அலுப்புத் தரும் வேலை தருவதால் பாலர்களுக்குப் பள்ளியில் விருப்பம் ஏற்படுவதில்லை. எழுத்து வேலையில் நிர்ப்பந்தப் படுத்துவதால் பாலர்களது இயல்பான சுறுசுறுப்பு சுபாவம் மங்கிப்போகிறது. கொஞ்ச நேரம் எழுதிய பிறகு, பேச்சு சம்பாஷணை என்று மாற்றியமைப்பது அவசியம்.

எழுத்துப் பயிற்சி தொடங்கும்போது பாலன் வளர்ச்சிப் பருவம் எவ்வளவு உள்ளது என கவனிப்பது அவசியம். பென்சிலை விரலால் பிடித்து ஒரு எழுத்தின் உருவத்தை எழுதும் நோக்கத்துடன் செயல் புரிய வேண்டும். அதாவது விரல் தசைகளை இணங்கும்படி செய்யும் திறமை ஏற்பட்டிருக்கவேண்டும். ஐந்து வயது பாலர்களில் சிலருக்கு இந்தத் திறமை இராது. முதல் வகுப்புப் பிள்ளைகளில் அநேகமாய் எல்லாருக்கும் இந்த சக்தி இருக்கலாம். ஆனால் ஒரு சிலருக்குப் பென்சிலைப் பிடித்துக் கொண்டு ஒரு வடிவத்தை எழுதும் வகையில் செயல் ஆற்றமுடியாது. சிறிய சிலேட்டு பலப்பங்களைப் பிடித்துக் கொண்டு எழுதுவது ஆரம்பத்தில் சிரமமாயிருக்கும். நீண்ட சாக்குத் துண்டுகளைக் கொண்டு கரும்பலகையில் தாராளமாக கையை வீசிப் பெரிய எழுத்துக்களை இஷ்டப்படி முதலில் எழுத விடவேண்டும். முதல் வகுப்பில் சுவர்களில் பிள்ளைகள் கையெட்டும் வரையில் கருஞ்சிமெண்டு பூசி வைப்பது சௌகரியம்.

ஆரம்பத்தில் எழுத்துக்கள் எழுதாவிடினும் பற்பல வடிவங்களை எழுத உத்சாகம் தரவேண்டும். வளை கோடுகள், நேர் கோடுகள், சுழிகள் எல்லாம் போட்டு உருவங்கள் எழுதுவார்கள். இரண்டு

வாரங்களுக்குப் பிறகு எழுத்துக்கள் தொடங்கலாம்.

எழுத்து ஒருவித சித்திரம். பந்து என்ற பொருளை படத்தில் வரைந்து காட்டுவது போலவே, படம் இல்லாமல் சொல் சித்திரமாக எழுதுவது. அ க ர வரிசையில் எழுத்துக்களை எழுத வேண்டும் என்று ஒரு சிலர் கட்டுப்பாடு செய்வார்கள். சில வருஷங்களுக்கு முன் சில சீர்திருத்தக்காரர்கள் நேர்க்கோடு எழுத்துக்களையே பாலர்கள் சுலபமாக எழுதுகிறார்கள் என்று சாதித்தார்கள். இதை அனுசரித்து ட, ப, ம என்று சொற்களை ஆரம்பித்து வாசகப் புத்தகங்கள் ஏற்பட்டன. டப்பா, படம், பட்டம் என்று எழுதத் தொடங்கவேண்டும் எனத் திட்டம் செய்தார்கள். இவ்விதம் சாதிக்கும் பிடிவாத சீர்திருத்தக்காரர்களைப் பற்றி ஆசிரியர்கள் கலவரப்படவேண்டியதில்லை. அவர்களில் பெரும்பான்மையோர் திட்டமிடும் கொள்கைகள் பாலர்களுடன் பழகி அவர்களது உத்சாகங்களையும் மனப்போக்குகளையும் கவனித்து அதன் பயனாக ஏற்பட்டவை அல்ல. ஒவ்வொரு ஆசிரியரும் தனது சொந்த அனுபவத்தின் பயனாக எது மிகச் சிறந்தது எனக் கருதுகிறாரோ அதையே அனுசரிக்கவேண்டும். பாலர்களில் பலர் நேர்க்கோடு போடுவதற்கு சிரமப்படுவர். நேர்க்கோடு எழுத்துக்களை ஈர்க்குச்சிகளை வைத்துக் காட்டலாம். ஆனால் எழுதி வரையும்போது சிரமமாகவே இருக்கும். பல பிள்ளைகள் வெகு சுலபமாக சங்கிலிக் கோர்வை போல சுழிச்சுச் சுழிச்சு எழுதுவர். வளைவுக்கோடுகள் பிறகுதான் எழுத முடியும் என்ற விதியில்லை.

எல்லா எழுத்துக்களையும் எழுதத் தெரிந்த பிறகுதான் சொற்கள் எழுதத் தொடங்கவேண்டும் என்ற கட்டாயம் இல்லை. எழுதத் தொடங்கு முன்பே சிறு சொற்களைப் படிக்கும் திறமை வந்துவிட்டதால் சொற்களை எழுதும் பழக்கம் சுலபமாகும். சொற்களைப் பார்த்து எழுதுவது, படத்தைப் பார்த்துவிட்டு அதற்கான சொல்லை ஞாபகத்திலிருந்து எழுதுவது, சொல் உச்சரிப்பைக் கேட்டு எழுதுவது என்று பயிற்சிகள் அமைக்கவேண்டும்.

ஆரம்பத்திலேயே பாலன் எழுதும்போது உள்ள நிலையைக் கவனிக்கவேண்டும். • பென்சிலைப் பிடிக்கும் சௌகரியம், சிலேட்டு அல்லது நோட்டுப் புத்தகத்தை வைத்திருக்கும் வகை இவைகளைத் திருத்திக் காட்டுவது அவசியம். முதுகைக் கூனிக்கொண்டும் உடலை வளைத்துக்கொண்டும், நோட்டுப் புத்தகத்தை ஒருபுறம் மிகவும் சாய்த்துக்கொண்டும் எழுதாமல் பழக்கம் தரவேண்டும். கண் பார்வை தூரமும் படிக்கும்போது இருப்பதுபோல அமையவேண்டும். எழுத்து வடிவம் அழகுடன் அமையும்படி தொடக்கத்திலேயே கவனிப்பது முக்கியம். ஒரு மாதிரியான அமைப்புப் பழக்கமான பிறகு மாற்றுவது கஷ்டம். ஆரம்பத்தில் கவனியாத குறையினால் இப்போது அநேக பெரியவர்களது கையெழுத்து அழகாக இல்லை. ஆரம்பப் பழக்கம் சீராக இருப்பது அவசியம்.

பாலர்கள் அழகான எழுத்தைப் பார்த்துப் பின்பற்றி அவ்விதமே எழுதி ஒப்பிட்டுப் பார்ப்பார்கள். ஆகவே ஆசிரியர்கள் எழுத்து அழகாக இருக்கவேண்டுமென்பது விளங்கும். அழகான கையெழுத்து ஆசிரியருக்கு அவசியமான இலட்சணம். அவர் கையெழுத்து பாலர்களுக்கு மாதிரி வழிகாட்டியாக இருக்கும். கையெழுத்துப் பயிற்சி சிறந்ததொரு செயல் கலை. ஆசிரியருக்கு இந்தப் பயிற்சியில் சிறப்பு இல்லையெனில் சீக்கிரமாக முயற்சி செய்து வெற்றி காணவேண்டும். அவர் இதில் வெற்றி காண முடியாவிடில் சிறந்த காபி நோட்டுக்களை உபயோகிக்கலாம். அட்டைகளில் அழகான வடிவத்தில் சொற்களையும் சிறு வாக்கியங்களையும் எழுதி மாட்டி வைத்துப் பாலர்கள் பார்த்து எழுதும்படி தினமும் பயிற்சி தருவது அவசியம்.

அச்சிட்ட காபி புத்தகங்களை உபயோகிக்கலாம். பாலர்கள் படித்துப் பழக்கமான சொற்கள் இருப்பது நலம். அ க ர வரிசையில் இருக்கவேண்டுமென்பது அவ்வளவு முக்கியமல்ல. தமிழ் எழுத்

துக்கள் தனித்தனி இருப்பதே அழகு. விரைவாக எழுதும்போது பிறகு கூட்டெழுத்துக்களாக அமையும் பத்ததி வந்துவடுவது சகஜம். ஒவ்வொரு எழுத்தை எழுதின பிறகு பென்சிலைத் தூக்கி மறுபடியும் எழுதும்போது கால தாமதம் ஆகிறது. இதுபற்றி கூட்டெழுத்து எழுதினுல் விரைவு ஆகும் என்று கருதலாம். ஆரம்பத்திலேயே பயிற்சி முறை சீராகப் பழகினுல் கூட்டெழுத்து இல்லாமலேயே விரைவாக எழுதும் வழக்கம் வந்துவிடும்.

எழுத்துக்கு எழுத்து இடைவெளி, சொல்லுக்குச் சொல் இடைவெளி, வாக்கியத்திற்கு வாக்கியம் இடைவெளி இவைகள் அளவாகப் பழக்கம் வரும்படி கவனிப்பது அவசியம். ஆரம்பத்தில் இரட்டை வரிகளுக்கு நடுவில் எழுதப் பழக்கி, கொம்புகள், வளைவுகள், சுழிகள், விசிறிகள் முதலியன அமைவது அழகாக இருக்கும்படி பழக்கம் தரவேண்டும். அவ்வப்போது உடன் உடனே திருத்திக் காட்டுவது மிகவும் நல்லது.

கையெழுத்து ஒரு ஆக்கச் செயல். செய்துமுடித்த தன் வேலையைப் பிள்ளை தானே மதிப்பிட்டுப் பார்ப்பது நல்லது. மற்றவர் எழுத்துடன் ஒத்துப்பார்த்து தன் எழுத்தில் குறைபாடுகளைத் தானே கவனித்துக்கொள்ள முடியும். தினந்தோறும் இவ்வாறு ஒத்திட்டுப் பார்த்து வந்தால் அழகான எழுத்து எவ்விதம் இருக்கிறது என்ற மதிப்பு ஏற்படும். காபி எழுதிப் பழகிய இரண்டு மூன்று மாதங்களுக்குப் பிறகு தினந்தோறும் 10 நிமிஷ நேரம் பார்த்தெழுதும் பயிற்சி தரவேண்டும். வாரத்திற்கு ஒரு பீரியட் காபி எழுதுவது என்று தினசரி வேலைத் திட்டத்தில் தருவது போதாது. ஒரு பீரியட், அதாவது 40 அல்லது 45 நிமிஷ நேரம் எழுதுவது அலுப்பாக இருக்கும். தினந்தோறும் 10 நிமிஷம் எழுதும்படி திட்டமிடவேண்டும். தமிழ்ப் பாட சமயந்தான் கையெழுத்துப் பயிற்சிக்கு வேண்டுமென்பதில்லை. எல்லாப் பாடங்களும் தாய்மொழியில்தானே நடைபெறுவதால், எந்த பீரியட் சமயத்திலும் 10 நிமிஷ நேரம் எழுதுவது தாலாம்.

நேற்று எழுதியதை விட இன்று எழுதியது அழகாக இருக்கிறதா என்று பிள்ளையே ஒத்திட்டு மதிப்பிட்டுப் பார்க்க வேண்டும். ஒவ்வொரு வாரமும் எல்லாருடைய கையெழுத்துத் தாள்களை மதிப்பிட்டு, மிகவும் அழகான கையெழுத்தை வகுப்புக் காட்சியில் வைப்பது நல்லது. முதல்தரமான கையெழுத்தை வகுப்பில் விளம்பரப் பலகையில் வைத்து காட்டுவதால் பிள்ளைகளுக்கு உத்சாகமும் போட்டியும் உண்டாகும். வருஷ விழாவில் காட்சியில் சிறந்த கையெழுத்து என்று விளம்பரப்படுத்துவது சிறப்பு ஆகும்.

கையெழுத்து மதிப்பிடுவதில் ஒவ்வொரு வகுப்பிலும் ஒரு அளவு மதிப்பு இன்னதென்று திட்டமாகக்கொள்வது முக்கியம். ஐந்தாம் வகுப்பையும் இரண்டாம் வகுப்பையும் ஒத்திடுவது முறையாகாது. அந்தந்த வகுப்பு சராசரி மதிப்பு அளவு திட்டம் தெரியவேண்டும். இந்த மதிப்பு மாதிரி வகுப்புமுன் பிள்ளைகள் பார்வையில் இருப்பதால் அந்த அளவுக்குத் தாமே அவர்கள் சரிபார்த்துக் கொள்ள இயலும். இவ்வாறு வருஷா வருஷம் வகுப்புக்கு வகுப்பு விருத்தியாவது தெளிவாகும். ஐந்து ஆண்டுகள் ஆரம்பப் பள்ளியில் பயிற்சிபெற்ற பிறகு அழகும் தெளிவுமுள்ள சிறந்த கையெழுத்து ஏற்பட்டுவிடும்.

கையெழுத்து விருத்தியாகவேண்டும் என்று பொதுவாக ஆசைப்படுவதால் மாத்திரம் அபிவிருத்தி ஏற்பட்டுவிடாது. அதற்கான வழிகளைத் தினந்தோறும் திட்டமிட்டுப் பயிற்சி தருவது முக்கியம்.

அப்போதுதான் பயிற்சியின் பலன் படிப்படியாகப் பெருகும். பிள்ளையும் பயிற்சியினுல் வெற்றி காணலாம் என்ற திடமான நம்பிக்கை அடைவான். அதற்கான முயற்சி செய்யவும் முன் வருவான்.

விரைவாக எழுதுவது பயிற்சியினுல் தான் ஏற்படும். அழகாக எழுதவேண்டுமென்பதற்காக ஆறஅமர அரைமணி நேரம் நான்கு வரிகள் எழுதினுல் அது பயிற்சி ஆகாது. ஆரம்ப காலத்தில் அழகும் தெளிவும் வற்புறுத்திப் பழகிய பிறகு, துரிதமாக எழுதும் பயிற்சிகள்

திட்டமிடுவது அவசியம். எந்த ஆக்கச் செயலிலும் துரிதம், அழகு, தெளிவு என்ற வரிசைக் கிரமத்தில் மதிப்பிடுவது தான் விசேஷம். காட்சியில் வைக்கப் படும் கையெழுத்துப் பிரதிகளில் எழு தினவன் பெயர், வகுப்பு, எழுதிய நேரம் குறிப்பிடவேண்டும்.

பார்த்தெழுதுதல் பயிற்சி சாதாரண மாக வீட்டு வேலையாகத் தருவது வழக்கம். ஆனால் அனேகருக்கு வீட்டுவேலை செய்வ தற்கான வசதிகள் இருப்பதில்லை. உட் கார்ந்து எழுதும் சௌகரியமே இராது. விளக்கு வசதியும் இராது. வீட்டு இட வசதி திருப்தியாக இருப்பதில்லை. இவை களை உத்தேசித்து, வீட்டு வேலைப் பயிற் சியை அதிகமாக நம்பி பலன் எதிர்பார்ப் பதில் பிரயோசனம் இல்லை. தினந்தோறும் வகுப்பிலேயே 10 நிமிஷ நேரம் எழுத் துப் பயிற்சி திட்டமிடுவதே சிறந்தது.

பார்த்தெழுதுவதும் கேட்டு எழுது வதும் பயிற்சி வழிகளில் முக்கியம். இவைகளில் முக்கிய நோக்கம் விரைவாக எழுதும் பயிற்சி. ஆனால் இந்த நோக்கத் தைச் சாதிக்கவேண்டி அநேக பள்ளி களில் திட்டமான முறைகளைக் கையாளுவ தில்லை. சொல்வதெழுதுதல் என்று வாரத் திற்கு ஒரு பீரியட் உண்டு. இதனால் பலன் காணுவது இல்லை. நான் அனு சரித்த முறையை இங்கு விவரிக்கிறேன்.

பார்த்து எழுதுவதைவிடக் கேட்டு எழுதுவதில் வேகமும் சுறுசுறுப்பும் அதிகம். இந்த நற்பலன்களைப் பயன் படுத்தவே பயிற்சி தருவது. கேட்டு எழுதும்போது கவனமும் அவசியம். ஆகவே பிள்ளைகள் கவனத்தைக் கவர்ச்சி செய்யும்படி திட்டம் இருக்க வேண்டும். சாதாரணமாக ஆசிரியர்கள் சொல்வ தெழுதுதல் பயிற்சி தரும்போது சொற் களையும் வாக்கியங்களையும் நிறுத்திச் சாவ தானமாகப் பலமுறை சொல்வது வழக் கம். ஒரே சொல்லை இரண்டு அல்லது மூன்று முறை சொல்வார். பிள்ளைகள் முகத்துக்கு முகம் ஜோடி ஜோடியாக நின்று எழுதுவார்கள். ஒரு பிள்ளை ஒரு சொல்லைத் திரும்பவும் சொல்வான். இடையே “ஹூம், ஆயிற்று?” என்று ஆசிரியர் வினவுவார். இன்னொரு பிள்ளை “சார்! என்ன?” என்று கேட்பான். ஆசிரியர் மறுபடியும் அந்தச் சொல்லைச் சொல்வார். இப்படியாக எட்டு அல்லது பத்து வரிகள் எழுதிய பிறகு சிலேட்டு கள் சேர்க்கப்படும். ஒவ்வொரு சிலேட் டாக ஆசிரியர் திருத்துவார். திருத்தும் நேரத்தில் பிள்ளைகளுக்கு வேலை இராது. சில பிள்ளைகள் வெளியே செல்வார்கள். இவ்விதப் பயிற்சியினால் சேதம் தான் மிச்சம். நேரமும் திறமையும் வீண் ஆகும். இவ்வித முறையை ஒதுக்கி விடுவது அவசியம்.

பயிற்சிக்கான பகுதிகளை முன்ன தாகவே திட்டமிட்டு ரகப்படுத்திவைத் துக்கொள்ளவேண்டும். முதல் வகுப் பில் கடைசி இரண்டு மாதங்களில் கேட்டு எழுதுதல் பயிற்சி தொடங்கும். சொற் கள் சிறுவாக்கியங்களில் ஆரம்பித்து மேல் வகுப்புக்களில் வசனப்பகுதிகள் அதிக மாகும். ஒவ்வொரு வகுப்பிலும் ஒரு நிமிஷத்திற்கு எழுதும் அளவைத் திட்ட மிட்டு அமைத்துக் கொள்வது முக்கியம். குறைந்த அளவில் வருஷ முதலில் தொடங்கி, வருஷ முடிவில் அதிக அளவு வரும்படி பயிற்சி இருக்கும்.

பார்த்து எழுதுவது, கேட்டு எழுது வது, நினைவிலிருந்து எழுதுவது என மூன்று விதம் பயிற்சி தேவை. ஒவ் வொரு அப்பியாசமும் குறிப்பிட்ட கால அளவில் முடிக்கவேண்டும். ஐந்து நிமி ஷத்தில் தொடங்கி மேல் வகுப்புக்களில் 10 அல்லது 12 நிமிஷ நேரம் பயிற்சி தரலாம். பிள்ளைகளை ஒன்று விட்டு ஒரு வர் கேட்டு எழுதுவதும் பார்த்து எழுது வதும் ஒரே சமயத்தில் செய்யும்படி அமைக்கவேண்டும். அதாவது ஒரு பிள்ளை கேட்டு எழுதுவான், அடுத்த பிள்ளை பார்த்து எழுதுவான். இவ்விதம் மாறி மாறி வேலை செய்வதால் அடுத்த பிள்ளையைப் பார்த்துக் காப்பி அடித்து விட்டான் என்ற குற்றம் ஏற்படாது. பிள்ளைகளை 1, 2; 1, 2, என நம்பர் சொல்லச் சொல்லி, 1 நம்பர் பிள்ளைகள் பார்த்து எழுதவேண்டும், 2 நம்பர் பிள்ளை கள் கேட்டு எழுதவேண்டும். பார்த்து எழுதும் பிள்ளைகள் பாடப் புத்தகத்தைப்

பார்த்து அதில் கவனமாக எழுதுவார்கள். அவர்கள் ஆசிரியர் சொல்வதைக் கேட்டு எழுதமாட்டார்கள். கேட்டு எழுதும் 2 நம்பர் பிள்ளைகள் மாத்திரமே ஆசிரியர் சொல்வதைக் கேட்டு எழுதுவார்கள். இருசாராரும் ஒரே சமயத்தில் எழுதத் தொடங்குவார்கள்.

ஆசிரியர் சொல்லும் பகுதி முன்னமேயே திட்டமிட்டு இருக்கும். ஒரு சொல்லை ஒரு முறைக்குமேல் இன்னொரு முறை சொல்லக் கூடாது. மேலும் பொருள் விளங்கும் வகையில் சொற்றொடர்களைச் சேர்த்துச் சொல்லவேண்டும். நிறுத்தல்களை நிறுத்துவது மாத்திரம் காட்டவேண்டுமேயன்றி முற்றுப் புள்ளி (full stop) என்று சொல்லக் கூடாது. கருத்தை அறிந்து பிள்ளைகளே முற்றுப்புள்ளிவைக்கும் பழக்கம் உண்டாகும். பிள்ளைகள் ஒருவரும் திருப்பிக் கேட்க அனுமதிக்கக்கூடாது. ஆசிரியர் ஒரே ஒரு தடவைதான் சொல்வார் என்ற நிச்சயம் அறிந்தவுடன் பிள்ளைகள் கவனமாக இருப்பார்கள். இன்னொருமுறை கேட்கலாம் ஆசிரியர் சொல்வார் என்று எண்ணுவதனால் கவனப்பயிற்சி உண்டாவதில்லை. தாமே கவனிக்கும் கட்டாயம் உண்டாவதால் கவனமாகக் கேட்கும் பழக்கம் ஏற்படும். பிள்ளை ஒரு சொல் எழுதும்போது ஆசிரியர் உச்சரிக்கும் அடுத்த சொல் காதில் விழுந்து கொண்டிருக்கும். இரண்டு மூன்று சொற்களை மனதில் இருத்திக்கொண்டு எழுதும் பயிற்சி வரும். எழுதி முடிந்த பிறகு ஆசிரியர் இன்னொரு முறை திரும்பவும் முழுப் பகுதியையும் வாசிக்கவேண்டிய அவசியமில்லை. ஆனால் பிள்ளைகள் தாம் எழுதியதைத் திருப்பி மௌனமாக வாசித்துப் பார்த்து கருத்துப் பிசகாமல் இருக்கிறதா என கவனித்து திருத்தலாம். இவ்விதம் இரண்டு மூன்று முறைகள் பயிற்சி தந்தபிறகு பிள்ளைகளது கவனம் வலிவடைவதும் சூசனையுடன் கருத்துப் புரிந்துகொள்வதும் விளங்கும். பிறகு சில பிள்ளைகள் சில சமயம் முன் சூசனையுடன் சில சொற்களைத் தாமே எழுதுவது புலன் ஆகும். கவனக்குறைவால் விட்டுவிட்ட இரண்டொரு சொற்களை சந்தர்ப்பத்தை அனுசரித்து இவ்விடம் இன்ன சொற்கள் தான் பொருந்தும் அவைகளே இருந்திருக்கும் என்று தாமே எழுதிப் பூர்த்தி செய்யும் திறமை வந்துவிடும்.

ஆசிரியர் சொல்வது குறிப்பிட்ட நேரத்தில் முடித்து விடவேண்டும். முன்னமே தயார் செய்துள்ள பகுதிகளில் அளவுக் கோடுகள் குறிப்பிட்டு அந்த அளவில் சொல்லும் பழக்கத்தை ஆசிரியர் செய்து கொள்வது முக்கியம். ஆரம்பத்தில் கடிகாரத்தை வைத்துக் கொண்டு பழக்கப்படுத்திக் கொண்டு, பிறகு காலக்கிரமத்தில் நிமிஷத்திற்கு எவ்வளவு சொற்கள் சொல்கிறோம் என்ற நிதானம் ஆசிரியருக்கும் பழக்கமாகி விடும்.

நிறுத்து என்றவுடன் பார்த்து எழுதுபவர்களும் கேட்டு எழுதுபவர்களும் உடனே நிறுத்திவிடவேண்டும். சில பிள்ளைகள் இன்னும் சில செகண்டு நேரம் எழுத முயற்சி செய்யலாம். எழுதக்கூடாது என்று உத்தரவு இடுவதைவிட, "எல்லாரும் பென்சிலை உயரத்தூக்கிப் பிடியுங்கள்,'' அல்லது ஜாபியில் போட்டுக்கொள்ளுங்கள் எனக் கட்டளையிடலாம். பார்த்து எழுதிய பிள்ளைகள் தாம் எழுதிய சொற்களைக் கணக்கிட்டு, சரி தப்பு சோதனை செய்துகொள்ள வேண்டும். கேட்டு எழுதியவர்களது தாள்களைப் பார்த்து எழுதியவர்களும், இவர்களது தாள்களை அவர்களுமாக மாற்றிக்கொண்டு சரிபார்க்கலாம்.

மாணவன் தேர்ச்சிப் பட்டியலில் அவனே குறிப்பிடும்படியும் பழக்கம் செய்வது அவசியம். வகுப்பில் மாட்டியிருக்கும் அட்டையில் பிள்ளைகள் ஜாபிதாவில் அவனவன் பெயருக்கு எதிரில் தினசரி தேர்ச்சி குறிப்பிடலாம். மாணவன் தன் நோட்டின் முதல் பக்கத்தில் தினசரி தேர்ச்சியைக் குறிப்பிடலாம்.

## சங்கரன்—IV வகுப்பு

### பார்த்தெழுதுதல்

| தேதி | காலம் | அளவு | தப்பிதங்கள் |
|---|---|---|---|
| 3-7-54 | 5 | 40 | 3 |
| 4-7-54 | | | |
| 5-7-54 | 5 | 40 | 4 |
| 6-7-54 | | | |
| 7-7-54 | 5 | 42 | 3 |
| 8-7-54 | | | |

### கேட்டு எழுதுதல்

| தேதி | காலம் | அளவு | தப்பிதங்கள் |
|---|---|---|---|
| 3-7-54 | | | |
| 4-7-54 | 5 | 40 | 2 |
| 5-7-54 | | | |
| 6-7-54 | 5 | 42 | 2 |
| 7-7-54 | | | |
| 8-7-54 | 5 | 42 | 1 |

மேலே குறிப்பிட்டிருப்பது ஒரு மாதிரியாகும். மாணவன் தானே மதிப்பிட்டுக் கொண்டு தேர்ச்சி ஏறுவதும் இறங்குவதும் அறிந்துகொள்ள இது உதவும்.

திட்டமிட்டுக் கையெழுத்துப் பயிற்சி அளிப்பதில் துரிதம், அழகு, தெளிவு மூன்றும் விருத்தியடைய வேண்டும். ஒவ்வொரு வகுப்பிலும் ஒரு அளவு வேகம் திட்டமிட்டுக்கொள்வது அவசியம்.

| வகுப்பு | சொற்கள் | ஒரு நிமிஷத்தில் எழுதுவது |
|---|---|---|
| 1 | 3 | ,, |
| 2 | 4—5 | ,, |
| 3 | 5—7 | ,, |
| 4 | 7—9 | ,, |
| 5 | 9–10 | ,, |
| 6 (I Form) | 10–12 | ,, |
| 7 (II ,, ) | 12–15 | ,, |
| 8 (III ,, ) | 15–18 | ,, |

இந்த அளவு மிகக் குறைந்தபட்ச அளவு ஆகும். சில வருஷங்களுக்கு எனது அனுபவத்தில் திட்டமிட்டது. ஆனால் இப்போது இன்னும் அதிகப்படுத்த வசதிகள் உண்டு. இந்த அளவை ஒரு நிதான மதிப்பாகக்கொண்டு அதை சாதிக்க முயற்சி செய்யவேண்டும். தினமும் 5 நிமிஷம் பயிற்சி இரண்டு வாரம் தந்த பிறகு வகுப்புப்பிள்ளைகளில் முக்கால் பங்குக்கு அதிகமாக இந்த அளவை சாதித்து விட்டால் அளவு திட்டத்தை அதிகமாக்கிக் கொள்ளலாம். 5 நிமிஷத்திற்கு 40 சொற்கள் இருந்தால் 45 சொற்களாக அதிகப்படுத்தலாம். இந்த அளவை பிள்ளைகள் சமாளிக்க முடியாவிடில், 5 நிமிஷத்திற்கு 35 சொற்களாகக் குறைத்துக்கொண்டு பயிற்சி தந்த பிறகு அதிகப்படுத்தலாம்.

மாதாமாதம் தேர்ச்சி ஏற்றம் கவனிப்பது மிகவும் அவசியம். நேரத்தை அதிகமாக்குவது மேல் வகுப்புக்களில் தொடங்கலாம். சொல்வதற்கான பகுதிகளைத் தயாரித்து வகுப்புவாரி சகப்படுத்தி, நிமிஷ அளவு குறிப்பிட்டு உபயோகிக்க வேண்டும். ஒவ்வொரு பகுதியும் ஒரு முடிவான கருத்து அமைந்திருக்கும் பாகமாயிருப்பது அவசியம்.

### சில மாதிரிப் பகுதிகள்*

**வகுப்பு 2.**—நிமிஷத்திற்கு 4 முதல் 6 சொற்கள்.—5 நிமிஷம்.

1. எங்கள் வீட்டில் | ஒரு பூனை உண்டு. | அது வெள்ளை நிறம். | என் மடியில் | அது படுத்துக் கொள்ளும். | அதை நான் | தடவிக் கொடுப்பேன். | அது மியாவ் என்று சொல்லும். |

(20 சொற்கள்)

2. நேற்று மழை பெய்தது. | தெருவெல்லாம் ஜலம் ஓடியது. | நாங்கள் கப்பல் விட்டு விளையாடினோம். | நான் விட்ட கப்பல் | ஒரு கல்லில் மாட்டிக்கொண்டது. | அதை எடுக்க | வேகமாக ஓடினேன். | தொப்பென்று ஜலத்தில் விழுந்தேன். | துணியெல்லாம் சேறு ஆகிவிட்டது. |

---

*தமிழ் சற்பிக்கும் வழிகள்—By V. நடராஜன். (ராஜம் & Co., 29-B. எட்வர்டு எலியட் ரோடு, மைலாப்பூர், சென்னை-4.) இப்புத்தகத்திலிருந்து தரப்பட்ட பகுதிகள்.

(30 சொற்கள்)

வகுப்பு 3.—நிமிஷத்திற்கு 6 முதல் 8 சொற்கள்.—5 நிமிஷம்.

1. வாழை மரம் நமக்கு மிகவும் உபயோக மானது. வாழைக்காயைக் கறி சமைக் கலாம். வாழைப்பழம் தின்ன இனிப் பாயிருக்கும். தோட்டம் போட இடம் இருந்தால் ஒவ்வொரு வீட்டிலும் வாழை மரம் பயிர் செய்வது நல்லது. வாழையடி வாழையாகக் கன்றுகள் வளர்ந்துகொண்டே வரும்.

(30 சொற்கள்)

2. வெயிலும் மழைத்தூறலும் இருக்கும் போது வானவில் தோன்றும். சூரிய னிருக்கும் திசைக்கு எதிரில் இந்த வில் காணப்படும். வானவில் வர்ணங் களைப் பார்க்க வெகு அழகாக இருக் கும். அச்சமயம் வெயில் கடுமை குறைந்து, குளிர்ச்சியான இளங்காற்று வீசும். இன்னொரு முறை வானவில் தோன்றும்போது அதில் காணப்படும் வர்ணங்களைக் கவனியுங்கள்.

(40 சொற்கள்)

4 வகுப்பு.—நிமிஷத்தில் 9 சொற்கள்.

1. கோடிக்கணக்கான நாங்கூழ்ப் புழுக் கள் மண்ணில் வாழ்கின்றன. அவை கள் மண்ணைத் தின்று மேலே கொண்டுவந்து கழிக்கின்றன. இவ் விதம் நிலத்தின் அடிமண் சத்து மேலுக்கு வருகிறது. புழுக்கள் செய்த துளைகள் வழியாக மண்ணுக் குள் காற்று செல்லும். செடி வேர்கள் மண்ணிலிருந்து சத்துக்களைச் சுலப மாக எடுத்துக்கொள்ளும். வளர்ச்சி செழுமையாகும். பயிர்களுக்கு இப் புழுக்கள் எவ்வளவு உதவி செய்கின் றன பாருங்கள்.

(45 சொற்கள்)

2. நிமிஷம் 10 சொற்கள்.

பசுக்கள் நமக்குப் பால் தந்து உதவு கின்றன. உழவுக்கு உகந்த தோழன் எருது. விவசாயிகள் எருதுகளை நன்கு போஷித்து வளர்த்தால் நல்ல பயன் உண்டு. சாகுபடி வேலைகளுக்கு மாத் திரமின்றி, வண்டிகள் இழுக்கவும். எருதுகளை உபயோகிக்கிறோம். நமது தேசத்தில் மாடுகள் அதிகம். உலகத் தில் உள்ள மாடுகளில் சுமார் ஐந்தில் ஒரு பங்கு இந்தியாவில் உண்டு. அவை கள் புஷ்டியாகவும் வியாதி இன்றியும் வளரவேண்டும். அவைகளைக் காப் பாற்றுவதில் நாம் இன்னும் அதிக கவ னம் செலுத்தவேண்டும்.

(50 சொற்கள்)

இம்மாதிரிப் பகுதிகள் போல வகுப் பிற்கு 20 தேவை. படிப்படியாக ஏற்றம் இருக்கவேண்டும். கருத்துக்கேற்றபடி நிறுத்தல் குறிப்பிடவும். நிமிஷத்திற் கான அளவைக் குறிக்கும்போது ஒரு கருத்து இடையில் நிறுத்தல் ஏற்படலாம், அவ்விதம் நிறுத்தாமல் கருத்து தொடர்ந்து இருப்பது முக்கியம். ஆகவே நிமிஷ அளவு சராசரி வேகம் என்பது அறிய வேண்டும். சொற்கள் கணக்கிடும் போதும் வீண் விவாதம் இன்றி நிதானம் செய்துகொள்வது சிறப்பு. இருக்கும் போது—ஒரே சொல்லாகக் கொள்ள லாம். ஒவ்வொரு பகுதியும் சிறியதொரு அழகான கட்டுரையாக இருப்பது நலம். பிள்ளைகளுக்கும் கட்டுரையில் எண்ணங் கள் கோர்வையும் வர்ணனை அழகும் விளங்கும்.

# கணக்கு : கற்பித்தல்

## கழித்தல்—ஆதாரமான 100 கழித்தல்கள்

[T. S. ராஜகோபாலன், B. A., L. T.,
இந்து உயர்நிலைப்பள்ளி, திருவல்லிக்கேணி]

### கழித்தல் என்பது என்ன?

கழித்தல் என்பது **நீக்குதல்** எனப் பொருள்படும். கையிலுள்ள 5 மிட்டாய்களில் 2 மிட்டாய்களைக் கொடுத்தால், நம்மிடமுள்ள மிட்டாய்களில் 2 நம்மிடமிருந்து நீங்குகின்றன, அதாவது கழிந்துவிடுகின்றன; கையிலுள்ள எண்ணிக்கை குறைந்து விடுகின்றது. கையிலுள்ள பொருள் அல்லது பண்டம் நம்மிடமிருந்து நீங்கும்போது, அது குறைகின்றது. கையைவிட்டுப் பொருள் அல்லது பண்டம் நீங்குவதைச் **சேலவு** (செல்லுதல்) என்கிறோம். இவ்வாறு கையைவிட்டு நீங்கிய பிறகு, கையில் மிகுந்துள்ளதை **மீதி** அல்லது **மிகுதி** என்கிறோம்.

### வகைகள்

கழித்தல் நமக்குப் பின்வருமாறு மூன்று வகைகளில் பயன்படும்.

**வகை 1.** ஒரு எண்ணிலிருந்து ஒரு எண்ணைக் கழித்து வரும் மீதியைக் கணக்கிட. உதாரணமாக, 5 மிட்டாய்களில் 2 மிட்டாய்கள் கொடுத்து விட்டால், மீதி எத்தனை? அதாவது 5-ல் 2 போனால், மீதி என்ன?

**வகை 2.** ஒரு எண்ணுடன் எவ்வளவு கூட்டினால் வேறொரு எண் கிடைக்கும்? உதாரணமாக, என்னிடம் 3 மிட்டாய்கள் உள்ளன; இவற்றுடன் எத்தனை மிட்டாய்கள் சேர்த்தால், மொத்தம் 5 மிட்டாய்கள் ஆகும்? அதாவது, 3-உடன் என்ன கூட்டினால் 5 ஆகும்?

**வகை 3.** ஒரு எண், வேறொன்றை விட எவ்வளவு பெரியது? உதாரணமாக, 5 மிட்டாய்கள், 3 மிட்டாய்களைவிட எவ்வளவு அதிகம்? அதாவது 5 என்பது 3-ஐ விட எவ்வளவு பெரியது?

இதனையே '3 என்பது 5-ஐ விட எவ்வளவு சிறியது?' என்றுஞ் சொல்லலாம்.

### இந்த வகைகள் மறைந்து கிடக்கும் விவரங்கள்

• இந்த மூன்று வகைகளிலும் மறைந்து கிடப்பன: இரண்டு எண்களுள் ஒன்று பெரியது, மற்றது சிறியது; பெரியதிலிருந்து சிறியதைக் கழிக்கவேண்டும். வகை (1)ல் கழித்தல் எளிதில் தோன்றும்; மற்ற இரண்டிலும் இது மறைமுகமாகும். வகை (2)-ல் அடங்கியுள்ளது; 3 சிறிய எண், 5 பெரிய எண்; சிறிய எண்ணுடன் கூட்டினால்தான் பெரிய எண் கிடைக்கும்; இவ்வாறு விடையைப் பெற, 5-லிருந்து 3ஐக் கழிக்கவேண்டும். வகை (3)-ல் அடங்கியுள்ளது: 3, 5-இவற்றுள் 5 பெரியது, 3 சிறியது; சிறியதுடன் கூட்டினால்தான் பெரியது வரும்; இவ்வாறு விடை கிடைக்க, 5-லிருந்து 3ஐக் கழிக்கவேண்டும்.

வகைகள் (2), (3) முதலில் மனதில் ஏற்றுக்கொள்ளச் சிறிது கடினமாதலால் இவற்றை முதலில் கற்பிப்பதில்லை.

இம்மூன்று வகைகளையும் கற்பிப்பதற்குமுன் ஆசிரியர், இவை ஒவ்வொன்றும் பிள்ளைகளின் சூழ்நிலையில் எவ்வாறு பயன்படும் என்று குறித்துக்கொண்டு, ஏற்றவகையில் கற்பிக்கப் பயன்படுத்த வேண்டும். உதாரணமாக,

வகை (1) கையிலிருப்பு, கையைவிட்டுப் போவது, வரவு, செலவு,
கையிலிருந்து குறைதல், முதலியன.

வகை (2) 5 அணு வேண்டும், கையில் இருப்பது 3 அணு; இன்னும் எவ்வளவு வேண்டும்?

5 மைல் செல்லவேண்டும்; 3 மைல் நடந்த பின்பு இன்னும் எவ்வளவு நடக்கவேண்டும்?

இப்போது வயது 3; இன்னும் எவ்வளவு காலத்தில் வயது 5 ஆகும்,......

வகை (3) மணிக்கு 5 வயது, முத்துவுக்கு 3 வயது; இவர்களுள் யார் பெரியவன்? எவ்வளவு?

ஊதல் 2 அணா, பொம்மை 5 அணா; எது விலை அதிகம்? எவ்வளவு?

### ஆதாரக் கழித்தல்கள் நூறு

ஆதாரக் கூட்டல்கள் நூறிலிருந்து பின்வரும் பத்துப் பிரிவுகள் ஏற்படும்:

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 17 |
| | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 9 |
| (2) | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 16 | 17 |
| | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 8 | 8 |
| (3) | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 15 | 16 |
| | 2 | 2 | 2 | 2 | 2 | 2 | 2 | 2 | 8 | 9 |
| (4) | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 14 | 15 | 16 |
| | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 7 | 7 | 7 |
| (5) | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 |
| | 3 | 3 | 3 | 3 | 3 | 3 | 3 | 7 | 8 | 9 |
| (6) | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 12 | 13 | 14 | 15 |
| | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 6 | 6 | 6 | 6 |
| (7) | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 11 | 12 | 13 | 14 |
| | 4 | 4 | 4 | 4 | 4 | 4 | 6 | 7 | 8 | 9 |
| (8) | 0 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| (9) | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 18 |
| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 9 |
| (10) | 9 | 10 | 11 | 12 | 13 | 10 | 11 | 12 | 13 | 14 |
| | 5 | 6 | 7 | 8 | 9 | 5 | 5 | 5 | 5 | 5 |

இக் கழித்தல்களுள் கழிப்பேற்றெண் 10 வரையிலுள்ளவற்றை முதலில் கற்பித்து, பின்பு மற்றவைகளை போதிக்கலாம்.

### போதனா முறை

இவற்றை ஒவ்வொரு பிரிவாகப் போதிக்கவேண்டும். ஒவ்வொரு கழித்தலையும் பிள்ளைகளது சூழ்நிலையில் பொருத்தி, பின்பு பொதுவாக்கி, வெற்றெண்கள் அடங்கிய கழித்தலாக மனதில் ஏற்கச் செய்யவேண்டும். விளையாட்டுக்களின் மூலமாகக் கற்பித்தல் நலம். ஒவ்வொரு பிரிவும் கற்பித்தபின்னர், இப்பிரிவிலுள்ள கழித்தல்கள் மனப்பாடமாகிவிட்டனவா என்று சோதனை செய்யவேண்டும்.

மூன்று பிரிவுகளின் போதனை, கீழே எடுத்துக்காட்டாகக் கொடுக்கப்பெற்றுள்ளது.

### பிரிவு 4

ஆசிரியர்: மேஜை மீது இதோ 5 பந்துகள் உள்ளன; இவற்றுள் 3 பந்துகளை விளையாடக் கொடுத்து விடுகிறேன். மீதி எத்தனை பந்துகள்? இதோ 5 விரைகள் உள்ளன; இவற்றில் 3 விரைகள் எடுத்துவிடுகிறேன்; மீதி எத்தனை விரைகள்?

பின்பு ஆசிரியர் கரும்பலகையில் பின்வருமாறு வரைந்து ○ ○ ○ ○ ○ இவற்றுள் 3-ஐ மறைத்து மீதி எத்தனை என்று கேட்கவேண்டும்.

ஆசிரியர்: 5 பந்துகளில் 3 பந்துகள் போக மீதி......

பிள்ளைகள்: 2 பந்து.

ஆசிரியர்: 5 விரையில் 3 விரை போக மீதி......

பிள்ளைகள்: 2 விரை.

ஆசிரியர்: 5 கோலியில் 3 கோலி போக மீதி......

5-ல் 3 போனால் 2

$$\begin{array}{r} 5 \\ 3 \\ \hline 2 \end{array}$$

இதைக் கரும்பலகையில் எழுத வேண்டும். மேலுள்ளதுபோல் கூட்டல்களிலும் எழுதிவருவதால், இவ்வாறு எழுதுவது கழித்தல் என்பதைக் குழந்தைகள் உணரவேண்டும். சிறுவர்களை அடிக்கடி இதைப் படிக்கச் செய்ய வேண்டும்.

இவ்வாறே மற்றக் கழித்தல்களையும் கற்பிக்கலாம்.

சோதனை (பிரிவு முற்றிலுங் கற்ற பின்பு)

(A) மனக் கணக்குகள்—வகைகள்

1. இந்தப் பெஞ்சில் 5 குழந்தைகள் இருக்கிறார்கள்; 2 பேர் விளையாடச் சென்றிருக்கிறார்கள். மீதி......

2. மணியனுக்கு 6 குழந்தைகள். இவர்களில் 4 பேர் ஆண் குழந்தைகள்; மீதி......பெண் குழந்தைகள்.

3. கையில் 15 அணா இருந்தது; 7 அணா செலவு செய்தேன்; மீதி...... அணா.

(B) கடை விளையாட்டு

உபகரணங்கள்: சில பொம்மைகள், ஊதல்கள்—ஒவ்வொன்றிலும் சீட்டுக் கட்டி, அதில் விலை குறித்திருக்க வேண்டும்.

ஆசிரியர்: மணியா, உன் கையில் 5 அணா இருக்கிறது. நீ ஒரு ஊதல் வாங்கினால் எவ்வளவு மீதி இருக்கும்?

பிரிவு 8

இந்தப் பிரிவிலுள்ள கழித்தல்களுள் 0—0 என்பது குழந்தைகளுக்கு மனதில் ஏற்பது சிரமமாகும். ஆதலால் இதை இந்தப் பிரிவில் கடைசியாக எடுத்துக் கொள்ளவேண்டும்.

ஆசிரியர்: இதோ 1 பந்து இருக்கிறது. இதை நான் கொடுக்கப் போவதில்லை. அதாவது நான் கொடுப்பது ஒன்றுமில்லை; அதாவது நான் கொடுப்பது 0. ஆதலால் 1 பந்து அப்படியே இருக்கும். ஆதலால் 1-ல் 0 போனால் 1.

பிரிவு 9

இதிலுள்ளவற்றுள் பெரும்பான்மையானவை எளியனவாகும்.

ஆசிரியர்: என்னிடம் ஒரு கோலி இருக்கிறது. இந்த ஒரு கோலியைக் கொடுத்துவிடுகிறேன். மீதி எத்தனை இருக்கும்?

பிள்ளைகள்: ஒன்றுமில்லை.

ஆசிரியர்: ஒன்றுமில்லை என்பது 0 என்று எழுதப்படும். ஆதலால் 1-ல் 1 போனால் 0.

இவ்வாறே மற்றவையும்.

கழித்தல்களில் மற்றை வகைகள்

நூறு ஆதாரக் கழித்தல்களும் நன்கு கற்றபின்பு, கழித்தல்களின் இரண்டாம் வகையையும், மூன்றும் வகையையும் பிள்ளைகள் கற்பது எளிதாகும். இரண்டாம் வகை, ஏறக்குறையக் கூட்டலைப் போன்றது. சாதாரணத் திறமை வாய்ந்த சிறுவர்கள் நொடியில் விடையைச் சொல்ல இயலும். இந்த வகையைப் பின்வருமாறு கற்பிக்கலாம்:

ஆசிரியர்: மணியிடம் 5 விரை இருக்கிறது. இதோ பார்:

○ ○ ○ ○ ○ ஐந்து விரை.

இதோ என்னிடம் ○ ○ ○ விரை இருக்கிறது.

இன்னும் எத்தனை இருந்தால் மணியிடம் இருப்பதற்குச் சமமாக இருக்கும்?

இவ்வாறே மேலுள்ள ஆதாரக் கழித்தல்களைக் கொண்டு, இவ்வகையைக் கற்பிக்கலாம்.

மூன்றாவது வகையைக் கற்பிக்கப் பின் வரும் முறை பயன்படும்:

ஆசிரியர்: மணியிடம் 5 விரை இருக்கிறது; இதோ பார்:

○ ○ ○ ○ ○ ஐந்து விரை.

வேதாவிடம் ○ ○ ○ விரை இருக்கிறது. யாரிடம் அதிகம்?

பிள்ளைகள்: மணியிடம்.

ஆசிரியர்: மணியிடம், வேதாவிடம் இருப்பதைவிட எத்தனை அதிகம் இருக்கிறது?

பிள்ளைகள்: 2

ஆசிரியர்: 5 என்பது 3-ஐவிட எவ்வளவு பெரியது?

பிள்ளைகள்: 2.

இவ்வாறே சில கழித்தல்களைச் சோதனைக்காகப் பயன்படுத்தலாம்.

சோதனைசெய்யப் பயன்படும் மற்றை முறைகள் கூட்டலில் போலவே.

---

**ஆரம்ப பாடசாலைக்குரிய எமது பாட புத்தகங்கள்**

**நமது தாய்மொழி வாசகம்**

ஆசிரியர் N. பரமசிவ அய்யர், பி. ஏ., எல். டி.

| | | | அ. | பை |
|---|---|---|---|---|
| முதற் புத்தகம் | (முதல் வகுப்பு) | .... | 4 | 0 |
| இரண்டாம் புத்தகம் | (இரண்டாம் வகுப்பு) | .... | 5 | 0 |
| மூன்றாம் புத்தகம் | (மூன்றாம் வகுப்பு) | .... | 6 | 0 |
| நான்காம் புத்தகம் | (நான்காம் வகுப்பு) | .... | 7 | 0 |
| ஐந்தாம் புத்தகம் | (ஐந்தாம் வகுப்பு) | .... | 7 | 6 |

**எமது புதிய கணக்குப் புத்தகங்கள் புதிய பாடதிட்டத்திற்கேற்ப பல புதிய நோக்கங்களுடன் எழுதப்பட்டுள்ளன.**

**கிண்டர்கார்டன் தினசரிக் கணக்கு**

ஆசிரியர் S. ஜகந்நாதன்
(கிண்டர்கார்டன் உதவி ஆசிரியர், டீச்சர்ஸ் காலேஜ், சைதாப்பேட்டை, சென்னை)
J. ராமச்சந்திரன், B. A. (HONS.) M. Ed. திருத்தியமைத்தது

| | | | | |
|---|---|---|---|---|
| முதற் புத்தகம் | (முதல் வகுப்பு) | .... | அணா | 5 |
| இரண்டாம் புத்தகம் | (இரண்டாம் வகுப்பு) | .... | ,, | 6 |
| மூன்றாம் புத்தகம் | (மூன்றாம் வகுப்பு) | .... | ,, | 10 |
| நான்காம் புத்தகம் | (நான்காம் வகுப்பு) | .... | ,, | 13 |
| ஐந்தாம் புத்தகம் | (ஐந்தாம் வகுப்பு) | .... | ,, | 14 |

**பி. ஜி. பால் & கம்பெனி, புத்தக வியாபாரிகள்**
4, பிரான்ஸிஸ் ஜோஸப் தெரு, சென்னை—1

# 24-வது தென்னிந்தியக் கல்வி வாரம்

**ஈடுபடும் சங்கங்கள் :**

1. தென்னிந்திய ஆசிரியர் சங்கம்
2. சென்னை ஆசிரியர் கில்டு.
3. சென்னை நூல்நிலைய சங்கம்
4. தென்னிந்திய கிருஸ்துவக் கல்வி கௌன்சில்.
5. பாரத் சாரண, கைட் சங்கம்.
6. சென்னை பெற்றோர் சங்கம்.
7. தென்னிந்திய முதியோர் கல்விச் சங்கம்.
8. இந்திய செஞ்சிலுவைச் சங்கம்.
9. சென்னை முதியோர் சங்கம்.
10. இந்திய பூகோள சொஸைடி.
11. தென்னிந்திய பாட்டு ஆசிரியர் சங்கம்.
12. சென்னை மாகாண உடற்பயிற்சி ஆசிரியர் சங்கம்.
13. உயர்தர பாடசாலை மானேஜர்கள் சங்கம்.
14. ஸெர்வண்ட்ஸ் ஆப் இந்தியா சொஸைடி.
15. அசோகா சொஸைடி.

**மத்தியக் கல்வி வாரக் கமிட்டி மெம்பர்கள் :**

1. ரெவ். டாக்டர் ஏ. ஜே. பாய்டு (தலைவர்).
2. ஸ்ரீ எஸ். நடராஜன்.
3. ஸ்ரீ டி. பி. ஸ்ரீனிவாஸவரதன் (காரியதரிசி).
4. ஸ்ரீ எல். மரியப்பிரகாசம்.
5. ஸ்ரீ ஸி. ரெங்கனாத அய்யங்கார்.
6. ஸ்ரீ வி. பி. மூர்த்தி.
7. ஸ்ரீ எஸ். டி. கிருஷ்ணமூர்த்தி ராவ்.
8. ரெவ். டி. தம்புசாமி.
9. ஸ்ரீ பி. எம். வேங்கடவரதன்.
10. ஸ்ரீ கே. எம். சிவராமன்.
11. ஸ்ரீ டி. டி. சிரஞ்சீவி.
12. ஸ்ரீ வி. எஸ். ரத்தினசபாபதி.
13. ஸ்ரீ ஆர். ஏகாம்பரம்.
14. ஸ்ரீ எம். என். சுந்தரவதனம்.
15. ஸ்ரீ டி. டி. அரசு.
16. மிஸ். பி. ஹேமாவதி.
17. ஸ்ரீ டி. என். லக்ஷ்மிபதி.
18. ஸ்ரீ எம். பி. ராஜகோபால்.
19. ஸ்ரீமதி ராஜலக்ஷ்மி ராஜகோபால்.
20. ஸ்ரீ ஸி. ஸி. அப்ரஹாம்.
21. ஸ்ரீ வி. எஸ். கோபால கிருஷ்ண அய்யர்.
22. ஸ்ரீ எஸ். ஆர். வெங்கட்ராமன்.
23. ஸ்ரீ டி. நீலகண்டன்.

## முகவுரை

முதல் கல்வி வார விழா 26-10-1931ல் கல்வி இலாகா டைரெக்டராயிருந்த ஆர். ஜி. க்ரீவ் துரையால் ஆரம்பித்து வைக்கப் பட்டது. பல பிரமுகர்கள் இவ்விழாவை ஒவ்வொரு வருஷமும் கொண்டாடும்படி தென்னிந்திய ஆசிரியர் சங்கத்தைக் கேட்டுக்கொண்டார்கள். கல்வியில் சிரத்தையுள்ள பல குழுக்களின் ஒத்துழைப்பைப் பெற்று இவ்விழா நடைபெற்று வருகிறது.

இவ்விழாவில் பங்கெடுத்துக்கொள்ளும் பல சங்கங்களின் பிரதிநிதிகளைக்கொண்ட 'மத்திய கல்வி வாரக் கமிட்டி' ஒன்று நிறுவப்பட்டுள்ளது. சென்னை கிருஸ்துவ கல்லூரி பிரின்ஸிபால் ரெவ். டாக்டர் ஏ. ஜெ. பாய்டு இக்கமிட்டிக்கு அக்ராசனராக இருக்க இசைந்துள்ளார். இவ் விழாக்களில் பல பெற்றோர்களும் பொது ஜனங்களும் கலந்து கொள்வதிலிருந்து கல்வி வாரம் பொதுஜனங்களிடையே ஒரு வித உணர்ச்சியை உண்டாக்கி இருக்கிறது என்பது தெளிவாகிறது.

இவ்வருஷம் சர்ச்சைக்குரிய விஷயம் "சிறந்த கல்வியே சமூக நலன் கருதும் இராஜ்ஜியத்திற்கு அடிப்படையாகும்" என்பதாகத் தீர்மானிக்கப்பட்டது.

## கல்வி வாரத்தின் நோக்கம்

கல்வி வாரத்தின் நோக்கம் நமது பாடசாலைகள் அடைந்துள்ள பல சாதனைகளைப் பற்றியும், பாடசாலைகளின் முக்கிய தேவைகளைப் பற்றியும் பொதுமக்களுக்கு அறிவிப்பதின் பொருட்டேயாகும். பொது ஜனங்கள்தான் பாடசாலைகளின்

போஷகர்கள். பாடசாலைகளின் ஊக்கம் அவர்களுடைய மெச்சுதலையும் தாராள மனப்பான்மையையும் பொறுத்திருக்கிறது. சர்க்கார் அறிக்கைகளில் கல்வியின் நோக்கத்தையும், பள்ளிக்கூடங்களின் வேலைகளைப் பற்றியும் பிரசாரம் செய்ய வேண்டுமென்று வற்புறுத்தப்பட்டு வருகிறது. ஆகையால், ஸ்தல ஸ்தாபனங்களும் இதர அதிகார வர்க்கங்களும் இக் கல்வி வாரத்தில் ஏற்படக்கூடிய சர்தர்ப்பத்தை உபயோகப்படுத்திக் கொள்வார்கள் என்று மத்திய கல்வி வாரக் கமிட்டி எதிர்பார்க்கிறது. பெற்றோர்களும் பொது ஜனங்களும் கல்வியின் முக்கியத்துவத்தை உணரவும், பள்ளிக்கூடங்களின் தேவைகளைத் தெரிந்துகொள்ளவும், ஆசிரியர்களுடன் ஒத்துழைக்கும்படியும் கல்வி வார நிகழ்ச்சிகள் நிறுவப்பட்டிருக்கின்றன. தற்காலதில் நமது பாடசாலைகள் என்ன செய்யவேண்டி இருக்கின்றன என்பதைப் பற்றி சிந்திக்கும்படி அவர்களைத் தூண்ட வேண்டும்.

அவ்வப்பொழுது ஏற்படும் மாறுதல்களுக்குத் தக்கபடி குழந்தைகளைத் தயார் செய்வது பாடசாலைகளின் கடமை. இவ்வித மாறுதல்கள் பாடசாலைகளில் கடுமையான வேலைகளை வாங்குகின்றன. பாடசாலைக்கும், சமூகத்திற்கும் உள்ள பிரச்னைகள் பல. இவைகளைத் தீர்க்க படிப்பாளிகளும், பொதுமக்களும், குழந்தைகளுக்கு எப்படி நன்மை செய்யலாம் என்ற ஒரே நோக்கத்தோடு ஒத்துழைக்க வேண்டும்.

பாடசாலைகள் குழந்தைகளை வாழ்க்கைக்கு உகந்த வழியிலும், நல்ல குணவான்களாகவும், குணவதிகளாகவும், பயிலுவிப்பதில் ஈடுபடுகின்றன என்பதை இவ்வாரத்தில் பொதுமக்களுக்கு முக்கியமாகத் தெளிவுபடுத்த வேண்டுமென்பதும் மத்திய கல்வி வாரக் கமிட்டியின் விருப்பம். பாடசாலைகளை ஒரு பொது நல ஸ்தாபனமாக அவர்களுக்கு அறிவிக்க வேண்டும். பாடசாலைகள் தங்கள் கடமைகளைச் சரிவர செய்துவருமேயானால், பாடசாலை, பெற்றோர், பொதுஜனம் இவர்களிடையே அனுதாபத்தோடு கூடிய புத்திசாலித்தனமான ஒத்துழைப்பு ஏற்படும் என்பது நிச்சயம். ஒவ்வொரு வருஷமும் கல்வி விஷயத்தில் செலவு அதிகமாகிக்கொண்டிருக்கலாம். நமது நோக்கங்களும் விசாலமாகிக்கொண்டு வருகிறது. "ஒவ்வொரு குழந்தைக்கும் சமமான சந்தர்ப்பம் அளிக்கவேண்டும்" என்பது எல்லா முன்னேற்ற நாடுகளின் கொள்கையாகும். இது பொதுமக்கள் சலிப்பில்லாமல் இப்பளுவை வகிக்க வேண்டுமென்பதைக் குறிக்கிறது. ஆகையால் கல்விக்குச் செலவு செய்வது புத்திசாலித்தனமான மூலதனம் என்றும் அதன் வருவாயானது சதவிகிதக் கணக்கில் இல்லாமல் தேசத்தின் அந்தஸ்தை உயர்த்துவதிலும் குடிமக்களை சோம்பேறிகளாயில்லாமல் ஊக்குவதிலும் உபயோகிக்கப்படுகிறது என்ற கொள்கையை பொதுஜனங்கள் அறிவதோடு வற்புறுத்தவும் வேண்டும். கல்வி முன்னேற்றத்திற்குத் தடையாயுள்ளது பெற்றோர்களின் அறியாத்தனம்தான். கல்வியினால் ஏற்படும் நன்மைகளை அவர்களும் அறியும்படி செய்துவிட்டால், கல்வி முன்னேற்றத்துக்கு எதிராயுள்ள பணத்தட்டு தானே விலகிவிடும்; ஏனென்றால் கல்வியினால் ஏற்படும் ஆதாயங்களை அறிந்த பொது ஜனம் அதற்கு வேண்டிய செலவுகளைத் தாங்களே வசூலித்துச் செலுத்துவார்கள்.

## உயர்ந்த கல்வி—தேச நிர்மாணத்தொண்டு

தேசத்தின் முன்னேற்றத்துக்காக, தனி நபர்கள், பொது ஸ்தாபனங்கள், அரசாங்கம் எல்லாருடைய உழைப்பையும், சக்தியையும், தனத்தையும், பயன் படுத்தக்கூடிய சேவை கல்வி சேவையாகும். தங்களிடம் உபரியாக உள்ள பணத்தைக் கல்விமுறையில் உபயோகிப்பதால் அதிக லாபம் அடையலாம்; ஏனென்றால் அப்படிச் செய்யாவிட்டால் பிற்காலப் பிரஜைகளின் க்ஷேமாபிவிருத்தியும், கல்வியபிவிருத்தியும், சமூக நலனும் சோபிக்காது, அதோடு, கல்வித் திட்டங்கள் அவ்வப்பொழுது ஏற்படும் மாறுதல்களுக்குகந்தபடி தானே திருந்த வேண்டுமே தவிர, தேசியக் கக்ஷிக்காரர்களிடம் ஒப்படைக்கப்பட்டு அவர்களின் விருப்பப்படி அடிக்கடி தீவிரமாக

மாற்றியமைக்கப்படக்கூடாது. கல்வியானது நாம் ஒருவிதமான தவறுதலும் செய்யக்கூடாததான விஷயமாகும். இப்பொழுது செய்யப்படும் தவறுகள் தலைமுறைகளுக்குக் கெடுதல் விளைவிக்கக் கூடிய ஹேதுக்களாகும். ஜனங்கள் இதை அறிந்ததாகத் தெரியவில்லை. மிகவும் அனுவசியமான அவசரத்தோடு கல்வி விஷயத்தில் தீவிரமான மாறுதல்களைச் செய்வதும் அபாயம் விளைவிக்கக் கூடும். அவைகளில் ஒருவிதமான திட்டம் அல்லது கொள்கை அல்லது முன்யோசனையோ கிடையாது. கடைசியில் இது ஒரு குழப்பத்தை உண்டாக்குகிறது. பிற்காலப் பிரஜைகளையும் தேசத்தின் முன்னேற்றத்தையும் பாதிக்கக்கூடியதாகையால், ஒவ்வொருவரும் கல்வி முறையை மிகவும் கவலையோடும் சிரத்தையோடும் நுட்பமாயும் கையாளப் படவேண்டிய புண்ணிய ஸ்தாபனமாகக் கருதவேண்டும்.

கல்வி போதனையானது, புத்தகப் படிப்போடல்லாமல், தொழில் முறையிலும் திருப்பப்படவேண்டும்; அப்பொழுது தான் மாணவர்கள் தங்கள் சுயமுயற்சியினால் தங்கள் பிற்கால க்ஷேமத்தைத் தரக்கூடிய தொழிலில் ஈடுபடவும் சமூகத்திற்குநன்மை செய்யக்கூடிய பிரஜையாகவும் விளங்குவார்கள். பிற்கால ஸத் பிரஜைகளைத் தயாரிப்பது மிகவும் யோசித்துச் செய்யவேண்டிய விஷயமாதலால், கல்வித் திட்டங்கள் தங்கள் வாழ் நாட்களில் முக்கியமாகக் கல்வி விஷயத்தில் ஈடுபட்டவர்களால் வகுக்கப்பட்டு அவர்களாலேயே நடத்தப்படவேண்டும். நன்றாக நிறுவப்பட்ட சமூகத்தில் சகோதர மனப்பான்மையோடும், சாதிப் பூசல் இல்லாமலும், சமரசமாகவும் இருக்கும்படி வருங்காலப் பிரஜைகளின் மனதில் அஸ்திவாரம் போட அவர்கள் பள்ளிக்கூடத்தில் படிக்கும் இளவயதில் தான் முடியும்.

இவ்விதப் பழக்கங்களை வகுப்புகளிலும், விளையாடுமிடங்களிலும், சாரணர் முகாம்களிலும் அபிவிருத்தி செய்யலாம். தற்காலக் கல்வி முறையில் நன்னடத்தைகளைச் சார்ந்த பாடதிட்டம் குறைவாயிருக்கிறது. நமது தேசத்திலுள்ள வேத நூல்களிலும் புராணங்களிலும் இவைகளைக் குறித்து அதிகமாக எழுதப்பட்டிருந்தபோதிலும் மாணவர்களுக்கு அவைகளைப் படித்து முக்கியமான சில பண்புகளைத் தெரிந்துகொள்ள சந்தர்ப்பம் வாய்ப்பதில்லை. நமது கல்வி முறையில் அது ஓர் குறைதான். இனி வகுக்கப்படும் கல்வி முறைத் திட்டத்திலாவது வருங்காலப் பிரஜைகளின் மனதில் மத சம்பந்தமாயும், நன்னடத்தை சம்பந்தமாயும் அபிருசி ஏற்படும்படி பாடதிட்டம் நிறுவப்படவேண்டும். இதோடுகூட, பள்ளிக்கூடத்திலிருந்து பாஸாகிப் போகும் மாணவர்கள், மந்த புத்தியோடும் கெட்ட நடவடிக்கையோடும் கூடிய ஜனங்களைச் சீர்திருத்தும் புண்ணியப் பணியில் ஈடுபடும்படியும் செய்யவேண்டும்.

ஒரு தேசம் சமாதானமாயும் சுபிக்ஷமாயும் இருக்கவேண்டுமானால் அதிலுள்ள ஜனங்கள் வியாபாரம், விஞ்ஞானம், அதையொட்டிய தொழில்களில் ஈடுபட்டாலொழிய அவை ஏற்படா. ஆகையால் நமது தேசிய சர்க்கார் கல்வித் திட்டத்தை வாணிபம், விஞ்ஞானம், உற்பத்தி முதலிய விஷயங்களைக் கொண்டதாக மாற்றியமைப்பார்களென நம்புகிறோம். ஏனென்றால் மிகவும் நுட்ப அறிவுடையவர்கள் அவ்விஷயங்களில் ஈடுபட அனுகூலமாயிருக்கும்.

## பெற்றோர்களுக்கு வேண்டுகோள்

குழந்தைகளின் கல்வியபிவிருத்திக்குப் பெற்றோர்கள் முதுகெலும்பு போன்றவர்கள். நமது தேச நிர்மாணத்தில் பொது ஜனங்களுக்குத்தான் உரிமையுண்டு. பெற்றோரும் பொது ஜனங்களும் பள்ளிக்கூடங்களுக்குச் சென்று, குழந்தைகள் என்ன கற்றுக்கொள்ளுகிறார்கள், பள்ளிக்கூடங்களுக்கு என்ன தேவை, தாங்கள் என்ன செய்யக்கூடும், ஆசிரியர்கள் என்ன செய்யவேண்டும் என்பனவற்றை அனுதாபத்தோடு அறிந்துகொண்டார்களேயானால், சுதந்திர தேசத்தில் கல்வி தான் முக்கியமானதும் முதன் முதல் கவனிக்கப்படவேண்டியதுமான விஷயம் என்று சர்க்கார் உணரும்படி செய்யலாம்.

கேற்று இடிந்து விழுந்திருக்கும் மட்ட ரகக் கட்டிடங்களிலிருந்து உன்னதமான கெம்பீரக் கட்டடங்களை நாளை கட்டுபவர்கள் யார்? வருங்காலப் பிரஜைகளாகிற நமது குழந்தைகள் தான். ஆகையால் அவர்களை தேசிய நிர்மாண வேலைகளில் பயிலுவிப்பது தற்கால கல்வித் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இக்கல்வி வாரம் பெற்றோர்களுக்கும் பள்ளிக்கூடங்களுக்குமிடையே பரஸ்பர ஒத்துழைப்பை உண்டாக்கும் என்று எதிர்பார்க்கிறோம்.

## பாடசாலைகளுக்கு ஒரு வேண்டுகோள்

குழந்தைகளுக்குப் படிப்பு அளிப்பது என்பது நமது கடமையில் ஒரு அம்சம் தான் ஆகும். ஏனென்றால் ஏராளமான படிப்பில்லாத முதியோர்கள் இருக்கிறார்கள். கல்வி வாரத்தின் நோக்கம் அவர்கள் விஷயத்திலும் ஊக்கமளிக்கவேண்டும் என்பதே. ஆகையால், கல்வியில் ஊக்கங்கொண்டுள்ள பாடசாலைகளும் கல்லூரிகளும் இக் கல்வி வார சந்தர்ப்பத்தை முக்கியமாகப் பயன்படுத்திக் கொள்ளுமாறு மத்திய கல்வி வாரக் கமிட்டி வேண்டிக்கொள்கிறது.

## கல்வி வார கால அட்டவணை :—

சனிக்கிழமை 30-10-1954—
**கல்வியும் சமூக நல இராஜ்ஜியமும்.**

ஞாயிற்றுக்கிழமை 31-10-1954—
**கல்வியும் ஆரோக்கிய வாழ்வும்.**

திங்கட்கிழமை 1-11-1954—
**கல்வியும் தொழில் நிபுணத்துவமும்.**

செவ்வாய்க்கிழமை 2-11-1954—
**கல்வியும் எல்லோருடைய பொறுப்பும்.**

புதன்கிழமை 3-11-1954—
**கல்வியும் பாடசாலைத் திட்டங்களும்.**

வியாழக்கிழமை 4-11-1954—
**கல்வியும் கூட்டுறவு வாழ்க்கையும்.**

வெள்ளிக்கிழமை 5-11-1954
**கல்வியும் நன்னடத்தை, மதம் சம்பந்தமும்.**

## கல்வி வாரத்தை நிறுவுவ தெப்படி ?

ஒவ்வொரு பகுதியிலும் கல்வி வாரத்தைச் சிறப்பாகக் கொண்டாட வேண்டி ஒரு ஸ்தலக் கல்வி வாரக் கமிட்டி நிறுவிக் கொள்ளவேண்டும். வெவ்வேறு துறைகளில் ஈடுபட்டுள்ள பல நபர்களின் ஒத்துழைப்பைக்கொண்டு நிகழ்ச்சிகளைத் திட்டமிடலாம். ஸ்தல ஸ்தாபனங்களும், உதவி பெறும் பள்ளி மானேஜர்களும் இதில் கலந்துகொண்டு கல்வி வாரத்தை சிறப்பாகக் கொண்டாடுவார்களென்று மத்திய கல்வி வாரக் கமிட்டி எதிர்பார்க்கிறது.

**பின் வருபனவற்றை அனுசரிக்கலாம்:—**

1. பெற்றோர்கள், மானேஜர்கள், பள்ளிக்குழு மெம்பர்கள், ஸ்தலஸ்தாபன மெம்பர்கள், பிராந்தியத்திலுள்ள பிரமுகர்கள், வியாபாரிகள், வக்கீல்கள், டாக்டர்கள் முதலியவர்களைக்கொண்டு பிராந்திய கல்வி வாரக் கமிட்டி நிறுவவும்.

2. ஆசிரியர்களாலும் மாணவர்களாலும் பள்ளிக்கூடத்தில் செய்யப்பட்ட பொருள்களைக்கொண்டு கண்காட்சி நிறுவவும்.

3. பெற்றோரும் பொது ஜனங்களும் வந்து பார்வையிடும்படி பள்ளிக்கூடத்தைத் திறந்து வைத்திருக்கவும்.

4. ஒவ்வொரு தினமும் பொதுக் கூட்டமும் உபன்னியாசங்களும் ஏற்பாடு செய்யவும், சாதாரண மனிதனுக்குக் கூட கல்வி சம்பந்தமாகப் பேச சந்தர்ப்பமளிக்கவும்.

5. உடற்பயிற்சிகள், நாட்டு நடனங்கள், நாட்டுப் பாடல்கள், கூட்டு விளையாட்டுக்கள் முதலியன ஏற்பாடு செய்து பையன்களையும் கல்வி வாரத்தில் ஈடுபடும்படி செய்யவும். எல்லா பெற்றோர்களையும் இதற்கு வரவழைக்கவும். இந்த நிகழ்ச்சியை பிரமாதமாக ஏற்பாடு செய்யவும். முடியுமானால் போட்டோக்கள் எடுத்து பத்திரிகைகளுக்கு அனுப்பவும்.

6. செஞ்சிலுவைச் சங்கம், முதலுதவிக் குழு, சுத்தம் செய்யும் குழு,

மாணவர் சபை முதலியன தயார் செய்யவும், பள்ளிக்கூடத்தை மிகவும் நேர்த்தியாக வைக்கவும்.

7. பொதுஜனத் தொடர்புக் குழு ஏற்படுத்தி, அப்பிராந்தத்தில் கல்வித் தேவையைப்பற்றி அறிவுறுத்தவும், ஆசிரியர்களின் சம்பளம், சேவை, முதலியவற்றையும் அறிவித்து பொது ஜனங்களின் ஒத்துழைப்பைப் பெறவும்.

8. பெற்றோர்-ஆசிரியர் சங்கம் நிறுவவும்.

9. முதியோர் கல்வி ஸ்தாபனங்கள் ஏற்படுத்தி நவம்பர் 2ந் தேதியை "படிப்பின்மை ஒழிப்பு" தினமாகக் கொண்டாடவும்.

10. கல்வி வார நடவடிக்கைகளை சுருக்கமாக பத்திரிகைகளுக்கும், தென்னிந்திய ஆசிரியர் சங்கத்திற்கும் அனுப்பவும்.

---


## தமிழ் உபபாட புத்தகங்கள்

புதிய பாடதிட்டத்திற்கேற்ப எழுதியவை

இப்புத்தகங்கள் நமது பள்ளிமாணவர், மாணவிகளின் ஆர்வத்தை ஊட்டும் விதத்தில் எழுதப்பட்டுள்ளன. பல படங்கள் உள்ளன.

### தேச பக்த மாலை

வித்வான் எம். சண்முகம் பிள்ளை
எழுதியது
எஸ். வையாபுரிப் பிள்ளை, பி. ஏ., பி. எல்.
அவர்களின் முகவுரையுடன் கூடியது

| | அணா | | அணா |
|---|---|---|---|
| 1. மகாத்மா காந்தி | 10 | 4. கவியரசி சரோஜினி | 8 |
| 2. கவியரசர் தாகூர் | 8 | 5. தேசீய கவிமணிகள் (பாரதியார், தாகூர், சரோஜினியார்) | 12 |
| 3. தேசிய கவி பாரதியார் | 8 | | |

எம். அனந்த நாராயணன், பி. ஏ., எல். டி.
எழுதியவை

6. வீர சிவாஜி அணா 10 7. சுவாமி விவேகானந்தர் அணா 12

**பி. ஜி. பால் & கம்பெனி, புத்தக வியாபாரிகள்**
4, பிரான்ஸிஸ் ஜோஸப் தெரு, சென்னை—1

# செய்தித் திரட்டு

**(1) ஈரோடு சரகம் துவக்கப்பள்ளி ஆசிரியர் சங்கம்.**

24-7-54ல் ஈரோடு சரகம் துவக்கப் பள்ளி சங்கங்களின் கொடுமுடி வட்டத் தின் உபாத்திமைச் சங்கக் கூட்டம், கொடுமுடி C. S. I. பாடசாலைக் கட்டி டத்தில் ஈரோடு ரேஞ்சு டிப்டி இன்ஸ் பெக்டர்கள் 1. ஸ்ரீ K. V. வெங்கட சுப்ரமணியன், B.A., B. Sc., 2. ஸ்ரீ சமா தானம் அவர்கள் தலைமையில் நடந்தது.

கடவுள் வணக்கத்திற்குப்பின் காரிய தரிசியின் அறிக்கை வாசித்து அங்கீகரிக் கப்பட்டது.

மரம் நடுவதற்காக அங்கத்தினர் யாவரும் சென்று சூழ்ந்து நிற்கவும், யார் பேரால் மரம் நடப்படுகின்றதோ அன்ன வரைப்பற்றி மாணவர்கள் பாட்டுப் பாட வும், அவருடைய வாழ்க்கையைப்பற்றி மரம் நடுபவர் பேசி, மரம் நடும்பொழுது போட்டோவும் எடுக்கப்பட்டது.

மா, கொய்யா, சீத்தா, பப்ளிமாஸ் முதலிய மரங்கள் நடப்பட்ட பின்பு எல் லோரும் சபாமண்டபத்திற்கு திரும்ப வந்தனர்.

வடக்குப் புதுப்பாளையம் தலைமை ஆசிரியர் 5ம் வகுப்பு மாணவருக்கு, மரம் நடும் விழா என்ற பொருளின் பேரில் மாதிரிப் பாடம் நடத்திக் காண்பித்தார்.

ஈரோடு Adult Training School Headmaster பாடசாலைக்குப் புறம்பான நிகழ்ச்சிகளின் முக்கியத்துவம் என்ற பொருளின்பேரில் நேர்த்தியான சொற் பொழிவாற்றினார்கள்.

தலைவர் முடிவுரையில் மரம் நடு விழா வைப் பற்றியும், இன்ஸ்பெக்ஷன் சமயத் தில் ஆசிரியர்கள் கைக்கொள்ள வேண் டியவைகளைப்பற்றியும் பேசி முடித்தார். காரியதரிசி S. எட்வர்டு ஜெரேமியா வந்த னோபசாரம் கூற சங்கம் முடிந்தது.

**(2) கு. தா. நந்தன் கோட்டை ஹரி ஜன நலப்பள்ளி.**

22-9-54ல் இப்பள்ளியின் கட்டிடத் திறப்பு விழா திருச்சி மாவட்ட பொது நல அதிகாரி உயர்திரு ஸ்டீபன், M. A. அவர்கள் தலைமையின்கீழ் கொண்டாடப் பட்டது. அவ்வமயம் N. P. ஆண்டியப் பன் முத்துராஜாவால் தேசீயக் கொடி யேற்றுவித்து, பின்னர் குளித்தலை வட் டம் பள்ளியின் கண்காணிப்பாளர் உயர் திரு. M. R. ரெங்கராஜுலு நாயுடு அவர் களால் ஷை கட்டிடம் திறந்துவைக்கப் பட்டது. திருச்சி, ஹரிஜன இன்ஸ் பெக்டர் உயர்திரு. ரெங்கராஜன் கல்வி என்பதைப் பற்றியும், கரூர் இன்சூரன்ஸ் மேனேஜர் உயர்திரு. E. V. அப்புக்குட் டன் நாயர் பள்ளியும் பெற்றோரும் என் பது பற்றியும், அழகாகப் பேசினார்கள். பின்னர், பள்ளியின் மாணவிகள் பரத நாட்டியம் ஆடினார்கள். பிறகு, லாலா பேட்டை உயர்திரு. தண்டபாணி அவர் களால் பள்ளி மாணவ மாணவிகளுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டு, நாட்டு வாழ்த் துடன் விழா சிறப்புடன் முடிவுற்றது. இறுதியாக புகைப் படமும் எடுக்கப் பட்டது.

**(3) இராமசாமி செட்டியார் உயர்தர ஆரம்பப்பள்ளி, நடராஜபுரம்.**

10-9-54ல் இப்பள்ளியின் மாணவர் சங்கக் கூட்டம் திருப்பத்தூர் ரேஞ்சு கல்வி கண்காணிப்பாளர் உயர்திரு. V. S. அப்துல் ரஹீம், B.A., L.T. அவர்கள் தலைமையில் நடந்தது.

முதலில் பள்ளி மாணவன் இறை வணக்கம் பாடக் கூட்டம் ஆரம்ப மாயிற்று. பள்ளித் தலைமை ஆசிரியர் திரு. S. முத்து வீரப்பா அவர்கள் தலை வரையும் வந்திருந்தவர்களையும் வர வேற்றார். சங்க அறிக்கைக்குப் பிறகு தலைவர் தமது முன்னுரையில் மாணவர் சங்கத்தின் அவசியத்தைப்பற்றி எடுத்

துக் கூறினர். பின்பு மாணவ, மாணவி கள் சொற்பொழிவுகள், கும்மி, கோலாட்டம் முதலிய நிகழ்ச்சிகளை நடத்திக் காட்டினர். தலைமை ஆசிரியர் தமது உரையில், மாணவர்களிடையே ஏற்பட வேண்டிய நற்பண்புகள் சிலவற்றையும், அவைகள் ஏற்பட ஆண்டவன்பால் அன்பு செலுத்துதல் அவசியம் என்றும் கூறினர். தலைவர் தமது முடிவுரையில் மாணவர்கள் ஒற்றுமையும், பரந்த நோக்கமும் பெற இச்சங்கம் பாடுபடவேண்டுமென்று கேட்டுக் கொண்டார். காரிய தரிசியால் வந்தனோபசாரம் கூறப்பட்டவுடன் நாட்டு வாழ்த்துடன் கூட்டம் இனிது முடிவடைந்தது

(4) ஆர். எம். இராமசாமி செட்டியார் உயர்தர ஆரம்பப்பள்ளி, நடராஜபுரம்.

15-9-54ல் இப்பள்ளியின் மாணவர் சங்கத்தின் ஆதரவில் "பாரதி விழா" உள்ளூர் ஓய்வுபெற்ற ஆசிரியர் திரு. ஏ. கே. சுப்பிரமணிய ஐயர் அவர்கள் சீரிய தலைமையில் கொண்டாடப்பட்டது.

முதலில் பள்ளி மாணவன் பாரதியாரின் பாட்டைக் கடவுள் வணக்கமாகப் பாடினன். அறிக்கை வாசித்தலுக்குப் பிறகு தலைவர் தமது முன்னுரையில் இச்சங்கத்தின் ஆதரவில் கொண்டாடப்படும் பாரதி விழாவிற்குத் தலைமை வகிக்கக் கிடைத்த பாக்கியத்தைக் குறித்து மகிழ்ச்சி தெரிவித்தார்கள். பின்பு தலைமை ஆசிரியர் எஸ். முத்துவீரப்பா அவர்கள் தமது உரையில் பாரதியார் பாட்டுக்களைப் பற்றியும், அவரது சமதர்மக் கொள்கைகளைப் பற்றியும் அழகாக எடுத்துரைத்தார்கள். உதவி ஆசிரியர்கள் சிலர் பாரதியாரின் பாட்டுக்களில் உள்ள இனிமையையும், எளிமையையும், பற்றிக் கூறி மாணவர்கள் அதிகமாக இப்பாட்டுக்களைப் படிக்குமாறு கேட்டுக் கொண்டார். பின்பு மாணவ, மாணவிகள் சொற்பொழிவு, கும்மி, கோலாட்டம் முதலிய நிகழ்ச்சிகள் நடத்திக் காண்பித்தனர். தலைவர் தமது முடிவுரையில் பாரதியாரின் தமிழ் பற்றைப்பற்றிப் பேசினார்கள். காரியதரிசி வந்தனோபசாரம் கூற நாட்டு வாழ்த்துடன் விழா இனிது முடிவடைந்தது.

(5) சத்திரம் கமிட்டி ஆரம்ப பாடசாலை, கடையம்.

11-9-54ல் இளைஞர் செஞ்சிலுவைச் சங்க, மாணவர் சங்க ஆதரவின் கீழ் "பாரதி தினம்" கொண்டாடப்பட்டது. அம்பாசமுத்திரம் ரேஞ்சு பாடசாலைகளின் தணிக்கை அதிகாரி ஸ்ரீ T. P. வெங்கடாசலப் பெருமாள் தலைமை தாங்கினர்.

தலைமையாசிரியர் ஸ்ரீ M. P. சுப்பிரமணியன் "மகான்களின் பெருமை" என்பதுபற்றி விரிவாகப் பேசினர்கள்.

உதவியாசிரியர்கள் ஸ்ரீ R. நடராசன், ஸ்ரீ R. V. கிருஷ்ணன் என்பார் "பாரதியாரின் கவிதை" பற்றி எளிய நடையில் எடுத்துரைத்தார்கள்.

பாரதியாரின் பாடல்களையே பாடி மாணவ மாணவியர் கும்மி, கோலாட்டம், நடனம் போன்ற நிகழ்ச்சிகளை சிறந்த முறையில் நடத்தி பொது ஜனங்களை மகிழ்வித்தனர்.

தலைவரவர்கள் தமது முடிவுரையில் பாரதியாரின் கவித்திறன், அதன் எளிய நடை, எல்லா மதத்தினரையும் சமமாகப் பாவிக்கும் தன்மை, அன்பு இவற்றை தெளிவாக எடுத்துரைத்தார். பாட்டுப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவி கல்யாணிக்கு பரிசு வழங்கினர்.

செஞ்சிலுவைச் சங்க கௌன்சிலர் ஸ்ரீ J. செல்லத்துரைப் பாண்டியன் வந்தனோபசாரம் கூற, தேசிய கீதத்துடன் கூட்டம் இனிது கலைந்தது.

(6) ஆரம்ப ஆசிரியர் சங்கம், திருவெண்ணெய்நல்லூர்.

11-9-54ல் திருக்கோவிலூர் ரேஞ்சு டிப்டி இன்ஸ்பெக்டர் திருவாளர் G. கந்தசாமி, B. A., L. T. அவர்கள் தலைமையில் கூடிற்று. ஜூனியர் டிப்டி இன்ஸ்பெக்டர் திரு. S. R. தியோடோர் அவர்களும் விஜயஞ்செய்திருந்தார்கள். திரு. சொக்கலிங்க முதலியாராலும், திரு. சௌந்தராஜனாலும் கடவுள் வணக்கம் பாடப்பட்டது. "தர்மம்" அல்லது "கடமை" என்பதுபற்றி திரு. தணிகா

சலமும், "பாடசாலையும், பொருட்காட்சி சாலையும்" என்பதைப்பற்றி திரு. R. தோதாத்திரியும், 1 முதல் 3 வகுப்பு முடிய "பாஷா போதனை"யைப்பற்றி திருமதி க்ளாடீஸ் ஜெயராஜனும் பேசினர். திரு. S. நாராயண அய்யங்காரும், திரு. எல்லப்ப செட்டியாரும் "தர்மம்" "கடமை"யைப்பற்றிப் பேசினர். அக்ராசனர் புதிய பாடசாலைகள் திறக்கப்படும் அவசியத்தைப்பற்றிக் கூறினர். ஜூனியர் டிப்டி இன்ஸ்பெக்டர் அவர்கள் "பாஷா போதனை"யைப்பற்றி விவரித்தார். காரிய தரிசி திரு. K. சாரங்கபாணி அய்யங்காரால் வந்தனோபசாரம் கூறப்பட்டு, தேசிய கீதத்துடனும், நாட்டுப் பாடலுடனும் சங்கம் மங்கள முற்றது.

(7) சோக்கலிங்க வித்தியாசாலை, லெட்சுமிபுரம்.

11-9-54ல் தேசியக் கவி பாரதியார் விழா கொண்டாடப் பெற்றது. வித்தியாசாலைத் தலைமை ஆசிரியர் G. சுவாமி நாதய்யர் அவர்கள் தலைமை வகித்தார்கள். இறைவணக்கத்திற்குப் பின் பாரதியாரின் வாழ்க்கைக் குறிப்பைத் தலைவரவர்கள் எடுத்துரைத்தனர். வித்தியாசாலை உதவி ஆசிரியர்களும், மாணவ மாணவிகளும் பாரதியாரின் வாழ்க்கைச் சம்பவங்கள், பாரதி நூல்கள் குறித்துப் பேசினர்கள். கும்மி, கோலாட்டம் நடைபெற்றன. தலைவர் முடிவுரைக்குப் பின் வந்திருந்தவர்களுக்குத் தின்பண்டம் நல்கி நாட்டு வாழ்த்துடன் விழா இனிது நிறைவெய்தியது.

(8) ஸ்ரீ சாரதா உயர்தர ஆரம்பப் பாடசாலை, மாம்பலம்.

1. 12-8-54 அன்று மாணவர் சங்கத்தில் சென்னை அரசினர் கலைக் கல்லூரி வடமொழித் தலைமைப் பண்டிதர் ஸ்ரீ T. K. வெங்கடேஸ்வரன் அவர்கள் தலைமை வகித்து 'ஒழுக்கம்' என்னும் விஷயம் பற்றி சொற்பொழிவு நிகழ்த்தினர்.

2. 23-8-54 அன்று லேடி விலிங்டன் கல்லூரியைச் சேர்ந்த ஸ்ரீமதி வஜ்ரேஸ்வரி அம்மையார் அவர்கள் பள்ளி ஆசிரியர் சங்கத்திற்கு தலைமை வகித்து "சமூகநூல் போதிப்பதின் முறைகள்" என்பது பற்றி சொற்பொழிவு நிகழ்த்தினர்.

3. ஆகஸ்டு மாதம் 18, 19, 20, 27 தேதிகளில் 1 முதல் 8 வகுப்புவரை உள்ள மாணவ மாணவிகள், சென்னைத் துறைமுகம், கீழ்ப்பாக்கம் குடிநீர் வடிகட்டும் தொழிற்சாலை, மிருகக் காட்சி சாலை, கோட்டை, மியூசியம் ஆகிய இடங்களுக்கு உல்லாசப் பிரயாணமாக அழைத்துச் செல்லப்பட்டனர்.

4. 1-9-54 அன்று பள்ளி ஹாலில் விநாயக சதுர்த்தி கொண்டாடப்பட்டது. விசேஷ பூஜையும் பஜனையும் நடந்தேறின. அதுசமயம் அடையார் ஆரோக்கிய ஆசிரமத் தலைவர் ஸ்ரீ வெங்கடேஸ்வரானந்தா அவர்கள் "விநாயகப்ரபாவம்" என்னும் பொருள் பற்றி உபந்யாசம் செய்தார். பிரசாதம் வழங்கப்பட்டது.

5. 10-9-54 அன்று சுவாமி சிவானந்தாஜியின் 68-வது பிறந்த தினம் கொண்டாடப்பட்டது. ஸ்ரீவெங்கடேஸ்வரானந்தா தலைமை வகித்து சிவானந்தரின் வாழ்க்கையை விளக்கிக்கூறினர். குழந்தைகளுக்கு சிவானந்தரின் விபூதிப்பிரசாதம் வழங்கப்பட்டது.

6. 13-9-54 அன்று மைசூரைச் சேர்ந்த ஸ்ரீகண்டயோகி என்பவர் தன் ஆராதனை மூர்த்தியான ஸ்வேதார்ச்சக கணபதியுடன் பள்ளிக்கு விஜயம் செய்து விநாயகருக்கு அபிஷேகமும், சஹஸ்ரநாம அர்ச்சனையும் நடத்தி குழந்தைகளை ஆசீர்வதித்தார்.

7. 19-9-54 அன்று பள்ளியில் பாரதி விழா கொண்டாடப்பட்டது. சென்னை மேல் சட்டசபை அங்கத்தினர் ஸ்ரீ K. பாஷ்யம், B. A., B. L. தலைமை வகித்துப் பாரதி பாடல் போட்டியில் வெற்றிபெற்ற சிறுவர் சிறுமிகளுக்குப் பரிசுகள் வழங்கினர். அவ்வமயம் சிறுவர் சிறுமிகளால் கதம்ப நிகழ்ச்சி ஒன்று நடத்தப்பட்டது. தலைவர் பள்ளியின் வேலைகளைப் பாராட்டி, மாணவர்களை தேச உணர்ச்சி உள்ளவர்களாக வேலை செய்யுமாறு கேட்டுக்கொண்டார்.

8. 18-9-54 அன்று ஆசிரியர் குழாத்திற்கு பள்ளி நிர்வாகிகள் கால் வருடத்து

வேலை பூர்த்தியானதை யொட்டி தேனீர் விருந்தொன்று நடத்தினர். அதில் எழும்பூர் வட்ட தணிக்கையாளர் குமாரி N. ஜானகி, B. A., B. T. அவர்களும் கலந்து கொண்டார்.

(9) வாலாஜாபாத் இந்துமத பாடசாலை.

அமெரிக்க ஐக்கிய நாட்டைச் சேர்ந்த விளம்பரத்துறையின் சென்னைப் பகுதியின் டைரக்டர் திரு. ஜேம்ஸ். வி. ஜாய்ஸ் அவர்கள், தம் மகனுடனும் தம்முடன் அலுவல் பார்ப்பவர்களுடனும் வாலாஜாபாத் இந்துமத பாடசாலைக்கு 28-9-54ல் வருகை புரிந்தார். பாடசாலைச் செயலாளரும் சாரணர்களும் அவர்களை வரவேற்றனர்.

பள்ளிக்கூடத்தின் பல்வேறு பகுதிகளைத் திரு. ஜாய்ஸ் பார்வையிட்டார். விளையாட்டுச் சாமான்கள் தயாரித்தல், நெசவு, அச்சுத் தொழில், தையல் வேலை முதலிய பல்வேறு துறைகளில் மேம்பட்ட முறையில் பயிற்சிபெறும் இம்மாணவர்களின் திறனை அவர் அக்கறையுடன் கவனித்தார்.

வாலாஜாபாத் இந்துமத பாடசாலையின் பொது மண்டபத்தில் காந்தியடிகள் பிறந்த நாள் விழா உயர்திரு. சாமி. சிதம்பரனார் அவர்கள் தலைமையில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது. பாடசாலை மாணவர்கள் பலர் காந்தி அடிகளார் வரலாற்றையும், அவருடைய கொள்கைகளையும் பற்றிப் பேசியது தலைவருக்கு மகிழ்ச்சி அளித்தது. உயர்திரு. இராசவேலு முதலியார், சி. கலியாணசுந்தர முதலியார், கா. ப. தணிகை அரசு ஆகியோர்களும் காந்தியடிகளாரால் பொதுவாக உலகமுழுதும் சிறப்பாக இந்திய நாடும் பெற்ற நன்மைகளையும் அவரால் நாம் தெரிந்து கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்கங்களையும் எடுத்துச் சொன்னார்கள்.

அண்மையில் காலஞ்சென்ற கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்களுடைய சிறந்த இயல்புகளும் எடுத்துக் கூறப் பெற்றன. அவரது மறைவால் தமிழ்நாடு அடைந்துள்ள இழப்பையும் எடுத்துப் பேசப் பெற்றன. அவரது ஆன்மா சாந்தி அடைய வேண்டுமென இறைவனை வேண்டிக் கொண்டனர்.

சென்னை தண்டையார் பேட்டையில் வசித்தவரும் யோகாசனங்களிற் சிறந்த பயிற்சி உடையவரும் மக்களுக்கு நன்மை புரிவதிலேயே காலம் முழுவதையும் செலவிட்டு வந்தவரும், சிறந்த தேசத்தொண்டருமான உயர்திரு. வி. என். குமாரசாமி அவர்கள் காலஞ்சென்றதைப் பற்றியும் அக்கூட்டத்தில் அநுதாபம் தெரிவிக்கப் பெற்றது.

(10) முதியோர் கல்விப் பிரசாரம், ஆம்பூர்.

17-9-54ல் சென்னை முதியோர் கல்விப் பிரசார தலைவர் உயர்திரு. தேவராஜ முதலியார், B. A., L. T. குழுவினர் ஆம்பூர் இந்து ஆரம்பப் பள்ளியில் தங்கி தங்கள் பணியைத் தொடங்கினர். வேலூர் மேற்குப் பிரிவு பள்ளி கண்காணிப்பாளர் திரு. D. மோசஸ் செல்லையா B. A , L. T. அவர்கள் உடன் வந்து பெரிதும் உதவினர். ஆம்பூர் ஆரம்பப்பள்ளி ஆசிரியர் சங்க செயலாளர் திரு. V. சந்திரநாத நாயனர் அனைவரையும் வரவேற்றார். மாலை 4 மணிக்கு இந்து ஆரம்பப்பள்ளி மாணவர்கட்குப் படம் காட்டப்பட்டது.

இரவு 7 மணிக்கு ஆம்பூரை அடுத்த சான்றோர் குப்பம் மாணிக்கம் மைதானத்தில் நகரசபைக் கவுன்சிலர் திரு. M. நடேச முதலியார் தலைமையில் ஓர் விழா நடைபெற்றது. நகராண்மை கலப்புப் பள்ளி மாணவர்கள் நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. திரு. D. மோசஸ் செல்லையா அவர்கள் சொற்பொழிவாற்றினர். பேசும் படங்கள் காட்டப்பட்டன. திரு. மா. முருகேசன் நன்றி கூறினர்.

இரவு 9 மணிக்கு கஸ்பா மிஷன் பள்ளி நகராண்மைக் கலப்புப் பள்ளி மாணவர்களின் நிகழ்ச்சிகள் திரு. இராமசாமி அவர்கள் தலைமையின் கீழ் நடைபெற்றது. முதியவர் அனைவரும் எழுத்தறிவு பெற பிரசாரக் குழுவினர் தூண்டினர். சுத்தம், சுகாதாரம், கல்வி பற்றிய படங்கள் காட்டப்பட்டன.

# மதிப்புரை

**மாணவ ஆசிரியர் செய்யும் ஆராய்ச்சி—**

சென்னை எழும்பூர் சர்க்கார் போதனா முறைப் பள்ளியின் தலைமை ஆசிரியர் ஸ்ரீ **R.** சுந்தரவரதன் தயாரித்துள்ள குறிப்பு நோட்டுப் புத்தகம் வரப்பெற்றோம். தசரா லீவு நாட்களில் ஒவ்வொரு மாணவ ஆசிரியரும் தத்தம் கிராமத்தைப் பற்றிய விவரங்களைக் குறிப்பிட இந்த நோட்டுப் புத்தகம் பயன்படும். இவ்வித முயற்சி மிகவும் அவசியமானது. எல்லா மாணவரும் பூர்த்தி செய்த பிறகு அக் குறிப்புகளைப் பரிசீலனை செய்து கிராம ஆசிரியர் சுலபமாக மேற்கொண்டு நடத்தக் கூடிய ஒரு செயல் திட்டத்தை வகுத்து உதவுவார்கள் என நம்புகிறோம்.

'உண்மை இந்தியா—ஓர் அடிப்படை ஆராய்ச்சி' என்ற இந்த வேலையைப் பாராட்டுகிறோம்.

V. N.

**குணசீல குபேரர்:—** ஸ்ரீமதி D. மதுரம் எழுதியது. (ஓரியண்ட் லாங்கமன்ஸ், லிமிடெட். விலை 9 அ.)

இச்சிறு புத்தகத்தில் ஐந்து சிறு கதைகளிருக்கின்றன. ஆரம்பப்பள்ளி 4, 5 வகுப்புப் பிள்ளைகளுக்கு இம்மாதிரி கதைகளைப் படிக்க அவகாசம் கொடுத்தால், அக்குழந்தைகள் நல்ல குணமடைந்து, சமூக வாழ்க்கையில் உரிமை எடுத்துக்கொள்ளுவார்கள் என்று நாம் நம்புகிறோம்.

ஸி. ஆர்.

---

RULES SUPPLEMENT TO PART I-B

OF

**THE FORT ST. GEORGE, GAZETTE**

*dated 25th August 1954*

DEPARTMENT OF

HEALTH, EDUCATION AND LOCAL ADMINISTRATION

(EDUCATION)

Amendments to rules relating to establishments under district boards and municipal councils.

(*G.O. No. 1100. Education, 4th August 1954.*)

AMENDMENT

In the said rules, after rule 14, the following rule shall be inserted, namely :—

"14-A. Notwithstanding anything contained in rule 14, teachers including headmasters in elementary or secondary schools, who have retired from the service of district boards or municipal councils may be re-employed in the service of district boards or municipal councils in accordance with the general directions issued by the Government from time to time and with the sanction of the authorities specified in those directions."

C. S. RAMACHANDRAN,
*Secretary to Government.*

Regd. No. M. 3473

THE

# S. I. T. U. PROTECTION FUND LTD.

**520, HIGH ROAD, TRIPLICANE, MADRAS-5**

*(Registered under the Insurance Act as a Mutual Insurance Co.)*

## Total Assets Exceed 12,00,000

**No. of Policy-holders over 4500**

Please remember that this is your own Insurance Society and that its members form, as it were, a co-operative group to enable one another mutually to make provision for their old age and their families.

There are five tables for 10, 15, 20, 25 and 30 years.

Teachers may take ONE to SIX units according to their ages.

One unit guarantees a benefit of Rs. 250/-, which goes on increasing by Rupees Five after every year of membership.

You will not find a cheaper Insurance Cover.

By taking a Policy in the Protection Fund, you strengthen the teachers' organisation and at the same time make provision for your old age and family.

For particulars write to:

THE SECRETARY.

Printed by Sri T. K. Venkatesan at The Jupiter Press, Ltd., 109-C, Mount Road, Madras-18. Edited & Published by Sri S. Natarajan for "The South India Teachers' Union" 520, High Road, Triplicane, Madras.